விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்

டாக்டர் எ . நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்

தேசிய விருது பெற்ற பேராசிரியர்
பல்கலைப் பேரறிஞர்
டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

விளையாட்டுப் பதிப்பகம்
'லில்லி பவனம்'
8/1, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 4342232

பதிப்புரை

பல்கலைப் பேரறிஞர், டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக விளையாட்டுத் துறை தமிழ் இலக்கியத்திற்காக வாழ்ந்தவர்.

திருமூலர், திருவள்ளுவர், வள்ளலார் போன்றவர்களுக்குப் பிறகு, தேகத்தின் தெய்வாம்சம் பற்றி மக்களிடையே, மகிமையை வளர்க்கும் பணியைக் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் செய்து வந்தார்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையில் நம்பிக்கையுடைய இவர், **எங்கும் முதல், எதிலும் முதல்** என்பதுபோல, பல அரிய காரியங்களை நிறைவேற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவை நடத்திய ஓடுகளப் போட்டிகளில் வெற்றி வீரராகத் திகழ்ந்திருக்கிறார்.

தான் பெற்ற வெற்றியும், புகழும் எல்லோரும் பெற வேண்டும் என்பதற்காக **'விளையாட்டு இலக்கியத் துறை'** என்ற புதிய துறையை உருவாக்கினார்.

முதன் முதலாக விளையாட்டுத் துறை இலக்கிய நூலை 1964ம் ஆண்டில் எழுதிமுடித்த இவர், இதுவரை இருநூறு நூல்களைப் படைத்திருக்கிறார்.

இதற்காக, தான் வகித்து வந்த எல்லாப் பதவிகளையும் விட்டு விட்டு, முழுநேர எழுத்தாளராக வாழ்ந்தார்.

முதன் முதலாக 1987-ஆம் ஆண்டு உடற்பயிற்சி செய்வதற்கென்று **''விளையாட்டு இசைப்பாடல்கள்''** என்ற ஒலி நாடாவை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

பதிப்புரை

பல்கலைப் பேரறிஞர், டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக விளையாட்டுத் துறை தமிழ் இலக்கியத்திற்காக வாழ்ந்தவர்.

திருமூலர், திருவள்ளுவர், வள்ளலார் போன்றவர்களுக்குப் பிறகு, தேகத்தின் தெய்வாம்சம் பற்றி மக்களிடையே, மகிமையை வளர்க்கும் பணியைக் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் செய்து வந்தார்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையில் நம்பிக்கையுடைய இவர், **எங்கும் முதல், எதிலும் முதல்** என்பதுபோல, பல அரிய காரியங்களை நிறைவேற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவை நடத்திய ஓடுகளப் போட்டிகளில் வெற்றி வீரராகத் திகழ்ந்திருக்கிறார்.

தான் பெற்ற வெற்றியும், புகழும் எல்லோரும் பெற வேண்டும் என்பதற்காக **'விளையாட்டு இலக்கியத் துறை'** என்ற புதிய துறையை உருவாக்கினார்.

முதன் முதலாக விளையாட்டுத் துறை இலக்கிய நூலை 1964ம் ஆண்டில் எழுதிமுடித்த இவர், இதுவரை இருநூறு நூல்களைப் படைத்திருக்கிறார்.

இதற்காக, தான் வகித்து வந்த எல்லாப் பதவிகளையும் விட்டு விட்டு, முழுநேர எழுத்தாளராக வாழ்ந்தார்.

முதன் முதலாக 1987-ஆம் ஆண்டு உடற்பயிற்சி செய்வதற்கென்று **''விளையாட்டு இசைப்பாடல்கள்''** என்ற ஒலி நாடாவை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

முதன் முதலாக, தெய்வத்தன்மையுள்ள தேகத்தைத் திறம்படக் காக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, 1994-ஆம் ஆண்டு ''**ஓட்டப் பந்தயம்**'' என்ற திரைப்படத்தை தயாரித்துத் திரையிட்டுள்ளார்.

முதன் முதலாக சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் உடல் நலத்தின் மேன்மையை, கடந்த 30 ஆண்டுகளாக உலகுக்கு உணர்த்தி வந்தார்.

முதன் முதலாக அகில இந்திய வானொலி நிகழ்ச்சிகளிலும் கடந்த முப்பது ஆண்டுகளாக, தேக நலத்தின் தேவைகளை தெளிவுபடுத்தி வந்தார்.

விளையாட்டுத் துறைபற்றிய கருத்துக்களை கடந்த முப்பது ஆண்டுகளாக, நாளிதழ், வாரஇதழ், மாத இதழ்களில், கட்டுரை, கவிதைகளாக வெளியிட்டுள்ளார்.

முதன் முதலாக '**உடற்கல்வி மாமன்றம்**' என்ற அமைப்பை 1996ம் ஆண்டு தொடங்கி, மாணவர்களுக்கு தேக நலத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்ற தேர்வுப் போட்டிகளை நடத்தி, பல ஆயிரம் ரூபாயைப் பரிசாக வழங்கி பணியாற்றி மகிழ்ந்தார்.

வள்ளுவர் தமது திருக்குறளில் **உடல் ஒழுக்கம், உடல் நலம் - ஆன்மபலம்** முதலியவற்றை வளர்க்கும் விதத்தை வலியுறுத்தி விளக்கியிருக்கிறார் என்பதை, முதன் முதலாக மாறுபட்டு ஆய்வு செய்து '**திருக்குறள் புதிய உரை**' என்னும் நூலில் (அறத்துப்பால் மட்டும்) திருக்குறள் ஓர் உடலியல் நூல் என விளக்குகிறார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்க்கை வாழ்ந்த ஒரு சாதனையாளரின் நூலினை நாங்கள் வெளியிடுவதில் மகிழ்கிறோம்.

பதிப்பகத்தார்

முன்னுரை

விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் என்னும் தலைப்பே, நூலைப்பற்றி தெளிவாக விளக்கியிருக்கும் என்பதை நான் அறிவேன்.

இருந்தாலும், விளையாட்டு என்பது முரட்டுத்தனத்தையும் முட்டாள் தனத்தையும் முழு மூச்சாக வளர்த்து விடும் காரியம் என்று கருதிக்கொண்டு, கரைந்து, கனைத்து, கதறிக் கொண்டு வாழ்பவர்களுக்கு விளையாட்டு என்பது அருமையான செயல், அற்புதமான நடவடிக்கை, ஆனந்தமான காரியம், என்பதை விளக்குவதற்காகவே மேலும் இந்நூல்பற்றி எழுத வேண்டியிருக்கிறது.

விளையாட்டுக்களில் பங்கு பெற்றவர்கள், கலந்து கொண்டு காலம் கழித்தவர்கள், பார்த்துப் பரவசம் அடைந்தவர்களில் பலரை இந்நூலில் அறிமுகப்படுத்தி இருக்கிறேன்.

அவர்கள் தங்களுக்குள்ளேயே தகுதி பெற்றவர்களாக மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் மனிதாபிமானத்துடன் வாழ வழிகாட்டி, மாறாத புகழ்பெற்று, மணிமகுடம் போல சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றிருக்கின்றார்கள் என்பதைக் காட்டவே இவ்வாறு சுவையான சம்பவங்களை சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

விளையாட்டானது வாழ்க்கையை சுவையுடன் வாழ வழிகாட்டி இருக்கிறது; பத்திரமாக வாழ பாதுகாப்புத் தந்திருக்கிறது; பண்புடன் வாழ உதவியிருக்கிறது; முன்னேற்றம்பெற உற்சாகம் ஊட்டி இருக்கிறது; தவறு செய்தால் தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்று எச்சரித்திருக்கிறது என்பன போன்ற கருத்துக்களுக்கு, நிதர்சனமான சான்றுகளாகவே பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

அத்தனையும் உண்மை சம்பவங்கள். உலகின் பல பாகங்களில் வாழ்ந்து சென்ற, வாழ்கின்ற வீரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் தான்.

படிக்கும் பொழுது சுவையான இருப்பதற்காக மட்டும் அல்ல, படித்த பிறகும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். பெருமை பெற வேண்டும் வாசகர்கள் என்ற ஆர்வத்தில் தான் இந்நூலை எழுதியிருக்கிறேன்.

தொடர்ந்து என் நூல்களை ஆதரித்து வரும் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கும், அன்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

ஆசிரியரின் பிற நூல்கள்

01. விளையாட்டுக்களின் விதிகள்
02. விளையாட்டுக்களின் கதைகள்
03. விளையாட்டுக்களில் வினோதங்கள்
04. விளையாட்டு உலகில் வீரக் கதைகள்
05. விளையாட்டுக்களில் சொல்லும் பொருளும்
06. விளையாட்டுக்களில் வினாடி வினா-விடை
07. விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்
08. விளையாட்டு விழா நடத்துவது எப்படி?
09. விளையாட்டுக்களுக்குப் பெயர் வந்தது எப்படி?
10. விளையாட்டுத் துறையில் கலைச் சொல் அகராதி
11. விளையாட்டுத் துறையில் ஆங்கிலம், தமிழ், அகராதி
12. நலமே நமது பலம்
13. உடற்கல்வி என்றால் என்ன?
14. உலக நாடுகளில் உடற்கல்வி
15. உடலழகுப் பயிற்சி முறைகள்
16. உடற்கல்வியைக் கற்பிக்கும் முறைகள்
17. தேகத்தை தெரிந்து கொள்வோம்
18. பெண்களும் பேரழகு பெறலாம்
19. ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள்
20. பேரின்பம் தரும் பிராணாயாமம்
21. பயன்தரும் யோகாசனப் பயிற்சிகள்
22. பலம் தரும் பத்து நிமிடப் பயிற்சிகள்
23. இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள்
24. நீங்களும் உடலழகு பெறலாம்
25. நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம்
26. நீங்களும் உயரமாக வளரலாம்
27. நீங்களும் வலிமையோடு வாழலாம்
28. நீங்களும் நோயில்லாமல் வாழலாம்
29. நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம்
30. உடலுக்கு அழகு தரும் எடைப் பயிற்சிகள்
31. உடல் எடையும் உணவுக் கட்டுப்பாடும்
32. உடலழகுப் பயிற்சி முறைகள்
33. உங்களுக்கு உதவும் உடற்பயிற்சிகள்
34. உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புகள்
35. கிரிக்கெட் ஆட்டத்தின் கதை
36. கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி - பதில்
37. கேரம் விளையாடுவது எப்படி?
38. சதுரங்கம் விளையாடுவது எப்படி?
39. ஒலிம்பிக் பந்தயத்தின் கதை
40. அகில உலக ஓடுகளப் போட்டி விதிமுறைகள்
41. குண்டான உடம்பைக் குறைப்பது எப்படி?

42. முக அழகைக் காப்பது எப்படி
43. தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள்
44. பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?
45. 1984ல் ஒலிம்பிக் பந்தயங்கள்
46. பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்
47. சியோல் ஒலிம்பிக் பந்தயங்கள்
48. இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள்
49. வெற்றி விளையாட்டு காட்டுகிறது (சிறுகதை)
50. அர்த்தமுள்ள விளையாட்டுக்கள்
51. தமிழ்நாட்டுச் சடுகுடுப் பாடல்களும் சடுகுடு விளையாட்டும்
52. மறைந்து கிடக்கும் மனித சக்தி
53. குழந்தைகளுக்கான உடற்பயிற்சியும் விளையாட்டும்
54. விளையாட்டுத் துறையில் தமிழிலக்கிய வளர்ச்சி
55. குறளுக்குப் புதிய பொருள்
56. வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்
57. வள்ளுவர் வணங்கிய கடவுள்
58. திருக்குறள் புதிய உரை (அறத்துப்பால் மட்டும்)
59. மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?
60. தெரிந்தால் சமயத்தில் உதவும்
61. வானொலியில் விளையாட்டுக்கள்
62. நமக்கு நாமே உதவி
63. விளையாட்டு ஆத்திச்சூடி
64. வாழ்க்கைப் பந்தயம்
65. சிந்தனைப் பந்தாட்டம்
66. அவமானமா? அஞ்சாதே!
67. அனுபவக் களஞ்சியம்
68. பாதுகாப்புக் கல்வி
69. சடுகுடு ஆட்டம்
70. மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள்
71. வேஷங்கள் விளையாடுகின்றன (சிறுகதைகள்)
72. பண்புதரும் அன்புக் கதைகள்
73. நல்ல பாடல்கள்
74. நல்ல நாடகங்கள்
75. நவரச நாடகங்கள்
76. நவனின் நாடகங்கள்
77. சுவையான நாடகங்கள்
78. நல்ல நல்ல கதைப் பாடல்கள்
79. Quotations on Sports and Games
80. General Knolwedge in Sports and Games
81. How to break ties in Sports and Games?
82. Physical Fitness and Health
83. நிமிர்ந்து நில் துணிந்து செல்
84. உடம்பைக் காப்பாற்றும் ஒன்பது இரகசியங்கள்
85. புதுப்புது சிந்தனைகள்
86. விளையாட்டுக்களின் வரலாறும் விளையாடும் முறைகளும்

பொருளடக்கம்

1.	இவரா என் தந்தை	10
2.	விளையாட்டும் அரசியலும்	12
3.	கரணம் தப்பினால் மரணம்	14
4.	மன்னனும் மக்களும்	16
5.	மனம் கலங்காத மாவீரன்	19
6.	தீமையிலும் நம்மை	21
7.	இப்பொழுது எப்படி?	23
8.	சைக்கிள் தந்த சந்தர்ப்பம்	25
9.	சீட்டாட்டப் பைத்தியம்	27
10.	குத்துச் சண்டைக்காரருக்கு குருட்டு யோகம்	29
11.	இந்தியாவிலும் இல்லாமல் இல்லை	31
12.	கிரிக்கெட்டில் ஆறு ஓட்டங்கள் ஏன் வந்தது?	33
13.	லட்சியம் தோற்பதில்லை	36
14.	எதிர்நீச்சல் எப்படித்தான் முடிந்ததோ	39
15.	இதயத் துடிப்பில் இருக்கிறது இரகசியம்	40
16.	நடையும், நடைப்பழக்கம்	42
17.	அதிர்ச்சி என்றால் அப்படி ஒரு அதிர்ச்சி	44
18.	இதுவல்லவோ பெருந்தன்மை	47
19.	தாங்கமுடியாதவருக்கு தண்டனை	50
20.	தவறும் தண்டனையும்	53

21.	முயன்றால் நிச்சயம் முடியும்	55
22.	பரிசும் பாராட்டும் சும்மா வருமா	57
23.	வார்னிஷ் விளையாடுகிறது	58
24.	பெர்னாட்ஷா பேசி விட்டார்	60
25.	மன்னனும் மனிதன்தான்	62
26.	பார்வையாளர்களுக்குப் பயம்	65
27.	கேட்டால் கொடுக்கப்படும்	68
28.	செத்தும் ஜெயித்த சீமான்	70
29.	வழி விட்ட வள்ளல்	73
30.	எதிரியானாலும் மனிதன் தான்	75
31.	விளையாட்டு வழங்கிய வீரம்	78
32.	அதிசயமான ஓட்டப் பந்தயம்	81
33.	எப்படித்தான் ஜெயிக்கிறார்களோ!	83
34.	பரிசு படுத்தும் பாடு	85
35.	உயரமாய் வளர்வது குற்றமா!	88
36.	ஆர்வத்திற்கு அளவு உண்டோ!	90
37.	இரும்படிக்கும் இடத்தில்	93
38.	வீரம் இருந்தாலும் விவேகம் வேண்டும்	95
39.	பெண்களே போய்விடுங்கள்	98
40.	இடம்பிடிப்பது சுலபமா என்ன?	102

1. இவரா என் தந்தை!

'எப்பாடு பட்டாவது என் தந்தையை பார்த்தே தீருவேன்' என்று அந்த சிறுவன் வீரசபதம் பூண்டான். தன் தாயை மட்டுமே அவன் அறிவான். தந்தையோ வேறு தேசத்திற்கு நாடு கடத்தப்பட்டார் என்ற செய்தி தெரியும். தந்தையின் பெயர் தெரியும். ஆனால் முகம் மட்டும் தெரியாது என்ற நிலையில்தான் அவன் வாழ்ந்தான். ஏக்கமே நிழலாக வாழ்ந்தான்.

ஏனென்றால், அவன் தன்தாய் வயிற்றில் இருக்கும் பொழுதே தந்தை வேறு தேசத்திற்கு விரட்டப்பட்டார். வேறு நாடு சென்ற தந்தையை எப்படி சந்திப்பது? எவ்வாறு சந்திப்பது? அதற்கு யாரை துணைதேடுவது? அதற்குரிய பணத்தை எப்படி சம்பாதிப்பது என்று எண்ணி எண்ணி ஒருமுடிவுக்கு வந்தான் அந்த சிறுவன்.

சிறந்த விளையாட்டு வீரனாக மாறிவிட்டால், வெளி நாட்டுக்குப் போய் வர எளிதாக முடியும். செலவும் அதிகம் ஆகாது. மதிப்பும் மரியாதையும் கிடைப்பதுடன், மனதிலுள்ள ஆசையையும் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தான்.

தனக்குப் பிடித்த விளையாட்டு ஒன்றை தேர்ந் தெடுத்தான். கைப்பந்தாட்டத்தினை பயில ஆரம்பித்தான். அல்லும் பகலும் அதே நினைவாக இருந்தான். நடந்தான். பயின்றான், முயன்றான். இறுதியில் அவன் முயற்சி வென்றது. கனவு பலித்தது. சீனாவின் கைப்பந்தாட்டக் குழுவில் ஒரு வீரனாக சேர்த்துக் கொள்ளப்பட்டான் அந்த வாலிபன்.

தாய்லாந்து நாட்டில் பாங்காங் நகரத்தில் நடக்கப் போகின்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள சீனாவின் பந்தாட்டக் குழு புறப்பட்டபோது, அவனது மனம் கடலலைபோல் முழங்கிக் கொண்டேயிருந்தது. அந்த முழக்கம் விரட்டியது. தாய்லாந்துக்கும் வந்தாகிவிட்டது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு, கடிதம் மூலமாகவே தொடர்பு கொண்டுவந்த தந்தையை காணப் போகிறோம் என்ற நினைவிலேயே வந்த அந்த வாலிபன், தந்தையைக் கண்டதும் தாவிக்குதித்தான். இருவரும் ஆரத்தழுவிக் கொண்டனர். ஆனந்தக் கண்ணீர் அருவியாக வழிந்தது. 'இந்த ஜென்மத்தில் இப்படி ஓர் வாய்ப்பு' என்று இருவரும் பேசிப்பேசி இன்பத்தை பகிர்ந்து கொண்டனர்.

தன் தந்தை வேறு ஒருத்தியை மணந்து, ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையாக ஆனபோதிலும் அவன் வருந்தவே இல்லை.

'இவரா என் தந்தை! என்று இகழவில்லை... எங்கே எப்படி வாழ்ந்தாலும் இவரே என் தந்தை! அதுவே எனக்குப் போதும்' என்று சொல்லி மகிழ்ந்தான்.

இப்படி வாய்ப்பளித்த விளையாட்டை வாழ்த்தினான். 'விளையாட்டு உடலை மட்டுமா வளர்த்துக் காப்பாற்றுகிறது? உறவையும் வளர்த்துக் காப்பாற்றும். ஒப்பற்ற புகழையும் வளர்த்துக் காப்பாற்றும் என்ற உண்மையையும் கண்டு கொண்டேன்' என்று வாயினிக்கக் கூறினான் **வாங்-காங்-கெங்** என்ற அந்த வீரன்.

சீனாவில் இருந்த மகனையும், தாய்லாந்தில் இருந்த தந்தையையும் 25 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்க வைத்து பேசவைத்த விளையாட்டின் பெருமைக்கு ஈடு இணை ஏது?

விளையாட்டு உலகில் வாங்-காங்-கெங் போன்று எத்தனையோ வீரர்களையும், வீராங்கனைகளையும் நாம் இனி சந்திக்க இருக்கிறோம்.

உண்மையாகவே விளையாட்டினை விரும்பி, உற்சாகமாக உழைத்தும் உறுதியாக முயற்சி செய்தும் பலர் உயர்ந்தார்கள். உன்னதமான புகழையும் அடைந்தார்கள்.

வாழ்க்கையிலும் போட்டிகளின் போதும் நிகழ்ந்த சுவையான சம்பவங்களை இனி தொடர்ந்து நாம் காண்போம்.

2. விளையாட்டும் அரசியலும்!

அமெரிக்கநாட்டு ஜனாதிபதியாக ஃபோர்டு இருந்த காலத்தில் ஒருநாள். வாஷிங்டனில் உள்ள ஓரிடத்தில் ஜனாதிபதியை சந்திக்கக் கால்பந்தாட்ட வீரர் பீலி என்பவர் அழைக்கப்பட்டிருந்தார். பிரேசில் நாட்டு வீரரான அவர், அமெரிக்க நாட்டின் நியூயார்க் காஸ்மாஸ் என்னும் குழுவிற்காக ஆடவந்திருந்தார். அவரை சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி அழைத்திருந்தார்.

அரசியல் தலைவரும் விளையாட்டு வீரரும் மாளிகையின் முன்புற புல்தரையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது, முன்னே கால்பந்து ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தபடி ஃபோர்டுபேசினார்.

'நமக்கு முன்னே புகைப்படக் காரர்களும் பார்வையாளர்களும் நிற்கின்றார்கள் - நான் பந்தை உதைக்கப் போவதைப் பார்க்கவும், படஙு பிடிக்கவும். நான் என்ன தலையாலா செய்யப்போகிறேன். காலால்தான் உதைக்கப் போகிறேன். என்று தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார்.'

மனம் விட்டுப் பேசும் அரசியல் தலைவரின் அன்பு முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார் பீலி. விளையாட்டு தன்னை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது பார்வையாளர்களில் ஒரு ரசிகர் தடுப்புக் காவலையும் மீறி, கையெழுத்து வாங்க ஒரு நோட்டுடன் ஓடி, கால்பந்தாட்ட வீரர் பீலியிடம் நீட்ட, எல்லோருமே அயர்ந்து போய்விட்டனர்.

உலகில் தலைசிறந்த நாடு அமெரிக்கா. அமெரிக்க ஜனாதிபதியே முதல் குடிமகன், என்ற பெருமையைப்

பெற்றிருக்கும் ஃபோர்டிடம் கையெழுத்து வாங்க முயற்சிக்காது. விளையாட்டு வீரரிடம் கையெழுத்து வாங்க விரும்பியதைப் பார்த்துப் ஃபோர்டு சொன்னார்.

'இங்கே யாருக்குப் புகழ் அதிகம் என்று பார்த்தீர்களா? எங்களுக்குத்தான்' என்று பீலியைப் பார்த்து பெருமையாகக் கூறினார் ஃபோர்டு. தான் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டாலும் உண்மையையும் மக்கள் உணர்வையும் மதித்த ஃபோர்டின் பெருந்தன்மைதான் என்னே?

பிரேசில் நாட்டிலே குக்கிராமம் ஒன்றில் அழுக்கடைந்த சந்துகளில் பந்தை உதைத்து ஆடத்தொடங்கிய நீக்ரோவான வீரர் பீலி, அமெரிக்க நாட்டு அரசியல் தலைவரையும் புகழில் மிஞ்சிய புகழ் வாய்ந்த விளையாட்டு வீரனாய் உயர்ந்தார்.

விளையாட்டு யாரையும் வீணாக்கியதில்லை. உண்மைதான்.

விளையாட்டை வீழ்த்திவிட்டு வாழ்ந்த நாடும் இல்லை
விளையாட்டை வாழ்த்திவிட்டு தாழ்ந்த நாடும் இல்லை.

3. கரணம் தப்பினால் மரணம்!

அவரது தொழில் வழக்கு மன்றத்தில் வழக்காடுவது, வாலிபரான அந்த வழக்கறிஞருக்கு வேறு ஒரு துறையில் ஆசை, ஈடுபாடு. அதில் உலக சாதனை நிகழ்த்திட வேண்டும் என்பது நீண்ட நாளைய கனவு. இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான அவர், உலக சாதனை நிகழ்த்துகின்ற பணியில் உற்சாகமாக ஈடுபட்டுப் பயிற்சி செய்தார்.

அவர் மேற்கொண்ட காரியம் டிவிஸ்ட் டான்ஸ் ஆடுவது. 1973ம் ஆண்டு கலிபோர்னியா நகரத்தைச் சேர்ந்த ஓர் அமெரிக்கன், **ராகர் கை இங்கிலிஸ்** என்பவர் டிவிஸ்ட் நடனம் ஆடி அதாவது 102 மணி நேரம் 28 நிமிடங்கள் ஆடி உலக சாதனை நிகழ்த்தியிருந்தார். அதனை முறியடிக்க முயற்சித்தார் அந்த இளம் வழக்கறிஞர்.

34 வயது நிரம்பிய வழக்கறிஞர் இலங்கையைச் சேர்ந்த கொழும்பு நகரத்து பசுமையான 'மேடை' ஒன்றில் டிவிஸ்ட் நடனத்தைத் தொடங்கினார். அவ்வப்போது தேவையான குளுகோஸ் பழரசம் மற்றும் வேண்டிய பானங்களை அவரது துணைவியார் அவ்வப்போது வழங்கிக் கொண்டேயிருக்க, ஆனந்தமாக அவரது ஆட்டம் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

பார்வையாளர்கள் பரவசத்துடன் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். வெற்றி வெற்றி என்று வீரமுழக்க மிட்டனர். உலக சாதனை என்று உற்சாகமாகக் கூவினர். ஆமாம். அந்த இளைஞர் 128 மணி நேரம் 16 நிமிடங்கள் வரை ஆடியதைத்தான் அவர்கள் ஆனந்தக் கூத்தாடி ஆரவாரத்துடன் பாராட்டினர்.

பாராட்டுக்குரிய வழக்கறிஞர் நடனத்தை நிறுத்தினார். ஆனால் நிற்க முடியாதவாறு நிலைகுலைந்து போனார். 5

நிமிட இடைவேளை நேரத்தில் அவரால் நடக்கக்கூட முடியவில்லை. மூச்சுத் திணறல் தொடங்கியது. ஆடிய களைப்பு அவரை உயிர்க்காற்றுக்காக அலைமோத வைத்தது.

பிறகு! அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே சிகிச்சை பலனளிக்காமல் களைப்பினால் கண்மூடிக் கிடந்தவர் பிறகு, விழிக்கவே இல்லை. வெற்றிமகளின் அரவணைப்பில் அவர் வீர மரணம் அடைந்தார்.

குமார் ஆனந்தன் என்னும் அந்த வழக்கறிஞர் உலகசாதனை நிகழ்த்தினார். என்றாலும் உலக வாழ்க்கையை இழந்து போனாரே! ஆட்டமும் வாழ்க்கையும் விளையாட்டாக இருக்கலாம். விளையாட்டு எப்பொழுதும் வினையாகிவிடக் கூடாது என்பதில் கவனமாகவே இருக்க வேண்டும்.

அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சல்லவா!

4. மன்னனும் மக்களும்

1698ஆம் ஆண்டில் ஒரு நாள் ரஷ்ய நாட்டை ஆண்ட மகாபீட்டர் என்னும் மாமன்னன், ராஜ தந்திர உறவின் நிமித்தம் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்தான். மன்னன் போனால் தனியாகவா போவான்! அவன்கூட 'ஆள், அம்பு, அணிவகுப்பும்' சென்றது. நாட்டில் ராஜதந்திர பேச்சு வார்த்தைகள் நடத்திவந்த சமயத்தில், ஒரு முறை இங்கிலாந்து நாட்டில் லண்டன் மாநகருக்கும் செல்ல நேர்ந்தது.

அப்பொழுது லண்டனில் மிகவும் புகழ்பெற்ற ஆட்டமாக இருந்த குத்துச்சண்டைப் போட்டியைக் காணும் வாய்ப்பும் மன்னனுக்குக் கிட்டியது. குத்துச் சண்டையின் வேகத்திலும் விவேகத்திலும் மன்னனின் மனம் லயித்துப்போய் விட்டது. போட்டியை மிகவும் ரசித்தான்.

போட்டி முடிந்து தன் இருப்பிடம் வந்து சேர்ந்த பிறகும். அந்தக் குத்துச்சண்டைப் போட்டியைப் பற்றிய நினைவு மனதில் ரீங்காரமிட்டதே ஒழிய, மன்னன் நினைவைவிட்டு மறைந்துபோய்விடவில்லை. மாறாக வளர்ந்துகொண்டே வந்தது.

உடனே தனது மெய்க்காப்பாளர்களையும், மற்றவர்களையும் அழைத்தான் மன்னன், தான் பார்த்த குத்துச்சண்டை போட்டியை விளக்கினான். 'உங்களில் யாராவது ஒருவன் இங்கே உள்ள குத்துச்சண்டைக் காரருடன் போட்டியிட்டு, உங்கள் திறமையை, வலிமையைக் காட்டமுடியுமா' என்று கேட்டான்.

மன்னன் தன் மனம் திறந்து ஆசையைப் பேசிவிட்டான். இங்கிலாந்து நாட்டு வீரனுக்கு ரஷ்ய நாட்டு வீரன் எளிதானவன் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டவேண்டும் என்ற எண்ணம் மன்னனுக்கு இருந்ததுபோலும்.

காவலர்களிலே ஒருவன் அரசனின் ஆவலைக் கண்டு, தான் போட்டியிடுவதாக ஏற்றுக் கொண்டான்.

இந்த போட்டிக்காக 500 கிணி நாணயங்கள் தருவதாகக் கூறினான் மகாபீட்டர். இதைத் தொடர்ந்து **சீமார்க்யூஸ் கார்மதன்** என்று அழைக்கப்படுகின்ற மாளிகைத் தோட்டத்தில் உள்ள ஓரிடத்தில் போட்டி நடத்தப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

லண்டனில் உள்ள முக்கியமான பிரபுக்களும் பல முக்கியஸ்தர்களும் போட்டியைக் காண வரவேண்டும் என்ற அழைப்பு விடுக்கப்பட்டது. மகாபீட்டரும், அவனது பரிவாரங்களுடனும் மெய்க்காப்பாளர்களுடனும் மிக ஆவலுடன் போட்டியின் முடிவைக் காண அமர்ந்திருந்தான்.

போட்டித் தொடங்கிவிட்டது. இங்கிலாந்து வீரன், தன்னுடன் மோதவா! என்று சவால் விடும் பாணியிலே ரஷ்ய வீரனை சத்தம் போட்டு அழைத்தான். அனுபவப்பட்ட வீரன் அல்லவா! ஆனால் ரஷ்ய வீரனோ தனது தந்திரப் பாணியிலே முன்னுக்கு வராமல், இருந்த இடத்திலே இருந்து, பயந்தவனாக பாவனை செய்து, சமயம் நோக்கிக் காத்திருந்தான்.

முன்னுக்கு வராமல் இருந்ததை, இங்கிலாந்து வீரன் பயந்துவிட்டான் என்ன எதிரி இவன் என்று திமிராக எண்ணிக்கொண்டான்! 'தன்னை மிகவும் பலசாலி, மகாவீரன்' என்றும் கருதிக்கொண்டான். ஆகவே, தானே அவன் இருக்குமிடம் ஓடிவந்து தாக்குதலைத் தொடங்கி விட்டான்.

இந்தக் குத்துச்சண்டை போட்டியிலே கைகளால் முகத்தில் மட்டும்தான் குத்தலாம் என்பதில்லை. தலையால் மார்பிலே மோதலாம். இடிக்கலாம். தள்ளலாம் என்ற விதியும் அந்த நாளில் இருந்துவந்தது. எனவே இங்கிலாந்து வீரன்

இதுதான் சமயம் என்று கருதி ஓடிவந்து, ரஷ்ய வீரன் மார்பிலே மோதித் தள்ள முயன்றான்.

தன் மார்பிலே அவன் மோத வருகிறான் என்று உணர்ந்துகொண்ட ரஷ்ய வீரன், சற்று ஒதுங்கி, திடீரென்று அவன் கழுத்தை தனது வலிய கைகளுக்கிடையில் வைத்துக்கொண்டு ஓங்கிக் குத்தினான். தாக்குதலினால் நிலைகுலைந்து, அடி தாங்கமுடியாமல் கைகால்களைப் பரப்பிக்கொண்டு இங்கிலாந்து வீரன் கீழே விழுந்தான்.

குத்துச்சண்டைக்கு வலிமைமட்டும் போதாது, தந்திரமும் சாமர்த்தியமும் வேண்டும் என்பதை உணர்த்தி, வெற்றிபெற்ற ரஷ்ய வீரனைப் பார்வையாளர்கள் அனைவரும் கைதட்டி சந்தோஷப்படுத்தினார்கள். அவன் சாதுர்யத்தைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

தனது வீரனின் வெற்றியை பாராட்டிய மகாபீட்டர், மகிழ்ச்சியில் மூழ்கினான். மேலும் 20 கிணி நாணயங்களை பரிசளித்துப் பாராட்டினான். தோற்ற இங்கிலாந்து வீரனுக்கு மருத்துவ உதவி செய்த வைத்தியருக்கு 20 கிணி நாணயங்கள் தந்து, தன் மகிழ்ச்சியையும் பெருந்தன்மையையும் காட்டிக் கொண்டான்.

மன்னன் தன்னைப்போலவே தனது மக்களும் வலிமையுடையவர்களாக விளங்கவேண்டும் என்று விரும்பினான். ஊக்குவித்தான். உற்சாகப்படுத்தினான். தெரிந்தும் பாராட்டினான். மனம்போல பரிசளித்தான்.

இப்படி இருக்கும் நாட்டில்தான் மக்களும் உடலைப் போற்றி வலிமையுடன் வாழக்கூடும். வாழ்கிறார்கள். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி. நம் நாட்டில் விளையாட்டுக்கு ஏன் போய் செலவு செய்யவேண்டும் என்று கேட்ட ஆட்சியாளர்களையும் பார்க்கிறோம். பிறகு எங்கே விளையாட்டுத்துறை இங்கே வளரும்? உருப்படும்!

5. மனம் கலங்காத மாவீரன்

'விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டால் வெற்றிதான் பெறவேண்டும். தோல்வி அடையக் கூடாது' என்பதுதான் பங்குபெறுபவர்கள் அனைவருடைய ஆத்மார்த்த நோக்கமாக அமைந்திருக்கிறது. ஆனால், நடக்கும் போட்டியின் முடிவை முன்கூட்டியே யாரால் நிர்ணயிக்கமுடியும்? எப்படி எதிர்பார்க்க முடியும்?

வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு என்பார்கள். இருவர் வெல்வது இயற்கையுமல்ல. ஆகவே, போட்டியானது ஒருவரது திறத்தையும், விவேகத்தையும், போட்டியிடும் முறைகளில் பின்பற்றும் பண்பாற்றலையும் பொறுத்துத்தான் வெளிப்படுகின்றதே தவிர, வெற்றியும் பரிசும்தான் முக்கியம் என்று விரும்பும் முரட்டுத்தனமான கொள்கைக்காக அல்ல!

வெற்றி பெறும்பொழுது மமதையும் வெறியும் அடைவதும், தோல்வி காணும்பொழுது தொய்ந்தும் துவண்டும் சோர்ந்துபோய்விடுவதும் உண்மையான விளையாட்டு வீரருக்கு அழகல்ல. அப்படி அவன் கலங்கினால், கவலைப்பட்டால், அவன் ஒரு பண்பட்ட விளையாட்டு வீரனுமல்ல. பகட்டித் திரியும் வித்தைக்காரன் போல்தான் அவன் இருக்கிறான். அதுதான் உண்மை.

இங்கே ஒரு விளையாட்டு வீரரைப் பாருங்கள். சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர். 14 முறை கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு (**14Innings**) கஷ்டப்பட்டு ஆடியபிறகு அந்த ஆட்டக்காரர் எடுத்த 'ஓட்டங்கள்' எவ்வளவு தெரியுமா! மொத்தம் மூன்றே மூன்று ஓட்டங்கள்தான்.

அப்படியா! அவர் எப்படி ஆடியிருப்பார் என்று நீங்கள் கணக்குப் பார்க்கவேண்டாமா! தன் ஆட்டம் எடுபடவில்லை, 'ஓட்டம்' வந்து கூடவில்லை என்பது அறிந்தும், அவர்

கவலைகொள்ளவில்லை. தனக்குரிய வாய்ப்பைப் பயன்படுத்தி விளையாடினார். முடிந்தவரை ஆடினார். அப்படியும் அவர் எடுத்த ஓட்டம் 0, 0, 0 ஆட்டம் இழக்கவில்லை, 1, 1 ஆட்டம் இழக்கவில்லை, 0, 0, 0, 0, 1 ஆட்டம் இழக்கவில்லை, **(Not out)** 0, 0, 0, 0 என்றே ஆடியிருக்கிறார்.

11 முறை விளையாடும்போது 0 ஓட்டம், மூன்று ஆட்டத்தில் 3 ஓட்டம். அதற்காக அவர் கலங்கினாரா! இல்லை. விளையாட்டை விளையாட்டுக்காக விளை யாடினார். மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினார்.

தோல்வியில் அவர் அனுபவத்தைக் கண்டார். தைரியத்தைக் கொண்டார். பின்னால் அவர் பெரும் புகழ்பெற அந்த மனோதைரியமே காரணமாக அமைந்தது.

நமக்கெல்லாம் தைரிய நெஞ்சமும் மனச்சாந்தியும் தந்திட முன்மாதிரியாக அமைந்த அந்த மாவீரனின் பெயர் ஜி.டெய்ஸ் என்பதாகும். இங்கிலாந்தில் உள்ள யார்க்ஷயர் எனும் மாநிலத்தவர். அவர் ஆடிய காலம் 1907 ஆம் ஆண்டு ஆகும்.

6. தீமையிலும் நன்மை

கிரிக்கெட் ஆட்டம் 'சிறந்த பண்புள்ளவர்கள் ஆடும் ஆட்டம்' என்ற பெயர் பெற்றதாகும். ஆனால், அதில் பங்கு பெற்றவர்களில் பலர் வம்பர்களாகவும், விதண்டாவாதக் காரர்களாகவும் விளங்கிய காரணத்தால் தான், விளையாட்டில் பல புதிய விதிகள் தோன்றின என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா!

'தீமையில் நன்மை' என்பார்களே அதுபோல, ஒரு தீமைதான் ஒரு புதிய விதி, கிரிக்கெட் ஆட்டத்தில் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது. அதுவே, ஒரு பூரண திருப்தி தரும் செயலாகவும் மலர்ந்து மிளிர்ந்தது.

கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தடித்தாடும் மட்டையானது (Bat) இந்த அளவில், இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு விதி முறை இல்லாதிருந்த 'காலம்; அந்தந்த ஆட்டக்காரர்கள் அவரவர்க்கு விருப்பமான தன்மையிலேயே பந்தடித்தாடும் மட்டையைக் கொண்டுவந்து ஆடலாம். அப்படித்தான் 1744ஆம் ஆண்டுவரை கிரிக்கெட் ஆட்டம் தொடர்ந்துவந்தது.

ஹேம்பில்டன், சொர்ட்சி எனும் இரு குழுக்களுக்கு இடையே ஹேம்பில்டன் எனும் இடத்தில் 1771ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. அந்தப் போட்டிக்கு ஆயிரம் ரூபாய்க்குமேல் பந்தயப் பணமும் கட்டப்பட்டிருந்தது. பந்தயத்தில் தோற்க யாருக்குத்தான் ஆசை வரும்! கட்டுக்கடங்காத ஆசையுள்ள ஒரு ஆட்டக்காரன்; ஆட்டத்தில் பங்குபெற வந்தான்! எப்படி?

சொர்டிசி குழுவினர் பந்தெறியும் வாய்ப்புப் பெற்று மைதானத்தில் நின்றபோது, பந்தடித்தாட தாமஸ் ஓய்ட் என்பவன் தனது பந்தாடும் மட்டையுடன் வந்து, விக்கெட்டின் முன்னே நின்றான். பார்த்தவர்களுக்கெல்லாம் பகீர் என்றது.

தாமஸ் ஒய்ட் வைத்திருந்த பந்தாடும் மட்டையின் அகலமும் விக்கெட்டின் அகலமும் சரியாக இருந்தது. அவர் அந்த மட்டையை வைத்துக்கொண்டு நின்றுவிட்டால், விக்கெட்டையே மறைத்துவிடும். அதனால், அவரை ஆட்டமிழக்கச் செய்யவே முடியாது. அவ்வளவு அகலமானதாக இருந்தது அந்த மட்டை.

செர்டிசி குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். கூச்சல் போட்டனர். குழப்பம் அதிகமாகியது. அவர்களிலே ஒருவர் தாமஸ் ஒய்ட் வைத்திருந்த மட்டையை வாங்கினார். அவர் கையில் ஒருவர் சிறு பேனாகத்தியைத் திணித்தார். உடனே மட்டையைச் சீவும் பணி தொடங்கியது.

கோபம் கொப்புளித்துக்கொண்டு வந்தாலும், ஒன்றும் செய்யமுடியாமல் தாமஸ் ஒயிட்டால் வேடிக்கைப் பார்க்கத்தான் முடிந்தது. இப்படி குழப்பத்தில் தொடங்கி கூச்சலில் எழும்பி, பிறகு ஆட்டக்காரர்களுக்கிடையே அமைதியான சமாதானப் பேச்சு தொடர ஆரம்பித்தது. பிறகு, ஒரு முடிவும் பிறந்தது.

அதாவது, பந்தாடும் மட்டையின் அகலம் இஷ்டப் பட்டவர்களுக்கு ஏற்ப இஷ்டப்பட்ட அகலத்தில் இனிமேல் இருக்கக்கூடாது என்று ஒரு வரம்பினைக் கொண்டு வந்தனர். மட்டையின் அகலம் நாலேகால் அங்குலத்திற்குமேல் போகவே கூடாது என்றும் விதியமைத்தனர். அதுவே இன்னும் அப்படியே மாறாமல் இருக்கிறது.

அடங்காத ஆட்டக்காரர் தாமஸ் ஒய்ட் கொண்ட விபரீத ஆசை, இன்றும் தொடர்ந்து வருகிற ஒரு விதி அமையக் காரணமாக இருந்ததே! அவரை நாம் பாராட்டலாம். எதிராட்டக்காரருக்குத் தீமையாக இருந்தது. எல்லோருக்கும் நன்மையாக முடிந்ததே, இதைத்தான் தீமையிலும் நன்மை என்று பெரியோர்கள் கூறுகின்றார்களோ என்னவோ!

7. இப்பொழுது எப்படி!

'என் பாட்டன் கலெக்டர், நான் தான் வேலையில்லாமல் தெருவில் நிற்கிறேன்' என்று எவனாவது ஒருவன் கூறினால், அவனை யார் மதிப்பார்? பழம் பெருமை பேசுவதில் புண்ணியமில்லை. இன்று நீ என்ன செய்கிறாய்? எப்படி இருக்கிறாய்? எவ்வாறு செயல்படுகிறாய்? எந்த நிலையில் உன்திறமை இருக்கிறது என்பதை வைத்துத்தான், உன் பெருமை கணக்கிடப்படுகிறது. 'உன் இடமும் நிர்ணயிக்கப் படுகிறது' என்பதை எல்லோரும் உணரும் காலம் வந்துவிட்டது.

சொல்லுக்கும் செயலுக்கும் பல சமயங்களில் சம்பந்தம் இருப்பதில்லை என்பார்கள். ஆனால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைப்பெற்ற (1980) கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஒரு சுவையான சர்ச்சை எழுந்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் சிறந்த பிரபல ஆட்டக்காரர், உலகப் புகழ் பெற்றவராக விளங்கியவர் முஷ்டாக் முகமது என்பவர், தனது 13 வயதிலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றவர். சிறந்த சாதனைகளையும் ஏற்படுத்தியவர். 1979-ம் ஆண்டு இந்தியாவில் போட்டியிட வந்த போட்டிக்குரிய பாகிஸ்தான் குழுவில், அவர் இடம் பெறவில்லை, அதுபற்றி முஸ்டாக் முகமதுவே வியப்புத் தெரிவித்திருந்தார். தான் ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதுதான் அவருக்குரிய வியப்பும் வினாவும்.

ஆனால், பாகிஸ்தான் அணியைத் தேர்ந்தெடுத்தது பற்றி **கர்னல் ரபிக்** என்பவர் அதுபற்றி விளக்கம் தெரிவித்தார். "முஸ்டாக் முகமதுவின் சேவையில் பாகிஸ்தான் அதிகமாகப் புகழ் பெற்றது உண்மைதான். அவரும் சிறந்த

ஆட்டக்காரர்தான். ஆனால் கடந்த ஒன்னரை ஆண்டு காலமாக அவரது ஆட்டம் முன்போல் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. அவ்வாறு அவர் நன்றாக ஆடாததால்தான், இந்தத் தேர்வில் அவர் தேறவில்லை. அணியில் இடம் பெறவில்லை.''

'நீ ஆளைச் சொல்லு நான் 'ரூலை'ச் சொல்கிறேன்' என்கிற இந்தக் காலத்தில் இப்படி ஒரு பதில். செயல்.

ஒருவர் எப்படி இருந்தார் என்று பழையதையே நினைத்து பெருமைப்பட்டு, வாய்ப்பளிக்கும் நம்மவர்கள் இதை ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும். ஒருவர் எப்படி இருந்தார் என்பதை மறந்துவிட்டு, இப்பொழுது எப்படி இருக்கிறார் என்பதை உணர்ந்து ஆட்டக்காரர்களை நாமும் தேர்ந்தெடுத்தால், இந்தியாவும் பல ஆட்டங்களில் உலக வெற்றி நாடாக வரலாம்! வருங்காலம் வளமாகலாம் என்று நாமும் எதிர்பார்ப்போம்.

8. சைக்கிள் தந்த சந்தர்ப்பம்

முகமது அலி என்ற பெயரைச் சொன்னவுடனே 'இவர் பெரிய குத்துச் சண்டை வீரராயிற்றே' என்று சிறு குழந்தைகூட கூறும் அளவுக்கு உலகப் புகழ்பெற்ற வீரர் முகமது அலி. ஆரம்ப காலத்தில், அவருக்கு அவர் பெற்றோர் வைத்திருந்த பெயர் **கேசியாஸ் கிளே** என்பதாகும். பின்புதான் முகமது அலி என்று தன் பெயரை மாற்றி வைத்துக்கொண்டார்.

நீக்ரோ சிறுவனான கேசியஸ் கிளே, இந்த குத்துச் சண்டை உலகில் எப்படி புகுந்தார்? அவராக வரவில்லை, அவரை இந்த உலகிற்கு வரவழைத்தது அவருடைய சைக்கிள்தான். இவர் சிறுவனாக இருந்தபொழுது மிகவும் பிரியமாக போற்றி வைத்திருந்த அவருடைய சைக்கிளை, எந்தத் திருடனோ தெரியாமல் எடுத்துக் கொண்டு போய்விட்டான். கிளே அடைந்த வேதனைக்கு அளவே இல்லை.

'அவனை ஒரு காலத்தில் எப்படியாவது கண்டுபிடித்து விடுவேன். அப்பொழுது அவனைப் பிடித்து, மனமார அடித்துத் தீர்த்துவிட வேண்டும்' என்று அந்த சிறுவன் மனம் விரும்பியது.

அதற்கு ஒரே ஒரு வழி, தன் உடம்பை தயார் செய்து கொள்ளவேண்டும். வலிமையுடன் தாக்கும் வல்லமையைப் பெறவேண்டும், தன்னையும் காத்துக் கொள்வதுடன், முடிந்தால் பிறர்க்கும் உதவவேண்டும். என்று முடிவு செய்துகொண்டு, கேசியஸ் கிளே குத்துச் சண்டை கற்றுக்கொள்ளத் தொடங்கினான்.

வேறு பல காரணங்களும் இருந்தாலும் குத்துச் சண்டையை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டான். சைக்கிள் தந்த சந்தர்ப்பத்தைப் பாருங்கள்.

உலகிலேயே சிறந்த வீரன் என்ற பட்டத்தை வாங்கித்தந்ததுடன், கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்வும் உதவி செய்தது. இன்று முகமது அலி என்ற வீரனுக்கு இணையாகக் கூறிட யாருமே இல்லை என்று பெரும் சாதனையையும் சாதித்து விட்டான்.

ஆகவே, இந்த சூழ்நிலையை உண்டு பண்ணிய பெயர் தெரியாத திருடனை நாம் வாழ்த்தலாமா? வீரனின் பிரியமான சைக்கிளையும் நாம்நினைவு கூர்வோமே!

சந்தர்ப்பங்களே மனிதனை உருவாக்குகின்றன. அதற்கு சான்றாகத் திகழ்கின்ற வீரர்களுள் முகமது அலியும் ஒருவர் என்றால் ஆச்சரியமே இல்லை.

9. சீட்டாட்டப் பைத்தியம்

ஜெர்மானிய நாட்டில் ஒருவர் இருந்தார். அவர் பெயர் லீபன் (**Lueban**) என்பதாகும். அவர், ஒரு உலக சாதனை செய்யவேண்டும் என்று விரும்பினார், சீட்டாட்டப் பிரியர் அவர். வேறு என்ன சிந்தனை அவருக்கு வரும்? சீட்டாட்டத்தில் சிறப்பான காரியம் பண்ணத் தொடங்கினார்.

ஒரு சீட்டுக்கட்டை எடுத்துக் கொண்டார். அந்த சீட்டுக்கட்டை கலைத்துப் (**Shuffle**) போட்டு, பிறகு ஒரு குறிப்பிட்ட வரிசைப்படி ஒழுங்குபடுத்தலானார். அவ்வாறு சீட்டுகளை சேர்த்துக் கட்டாக்கிய பிறகு கலைத்து ஒவ்வொன்றாகப் போட்டு, பிறகு வரிசைப் படுத்துவது. இப்படிச் செய்தால் ஒருமுறை செய்ததற்கு அர்த்தம்.

இப்படி அவர் நாற்பத்திரெண்டு லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து இருபத்தி எட்டு முறைகள் 42, 46, 028) செய்து உலக சாதனையை ஏற்படுத்தினார். இதற்காக அவர் ஒருநாளைக்கு 10 மணிநேரம் சீட்டுக்களை வைத்துப் புரட்டினார். இப்படியாக 20 ஆண்டுகள் தொடர்ந்து புரட்டினார் சீட்டுக்களை.

பிறகு என்ன ஆயிற்று! அவர் ஒரு உலக சாதனையை நிகழ்த்திய மகாவீரர் என்ற புகழையும் பெயரையும் பெற்றார். ஆனால் அந்தப் பெயரையும் புகழையும் கேட்கத்தான் அவருக்குக் கொடுத்து வைக்க வில்லை.

ஏன் தெரியுமா! அதற்குள் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. பைத்தியக்காரருக்கு என்ன புரியும்? பாவம்! வேண்டாத வேலை! சீட்டாட்டப் பைத்தியம் என்பார்கள். சீட்டாடியே பைத்தியம் பிடித்து விட்டது! இது எப்படி இருக்கிறது!

சாதனை நிகழ்த்த வேண்டும் என்று சோதனைகளில் தன்னை ஆழ்த்திக் கொள்வது வீரர்களுக்கு அழகுதான்.

ஆனால், சாதனைக்காக தன்னை வேதனைக்கு உள்ளாக்கிக் கொண்டு, வாழ்க்கையையே வீணடித்துக் கொள்ளும் வேண்டாத வேலையை விளையாட்டு விரும்புவதில்லை.

மனித இனத்தை வாழவைக்கவே, விளையாட்டு உதவுகிறது. இதை உணர்ந்து, விளையாட்டு வீரர்கள் விளையாட வேண்டும். நலம்பெற வேண்டும்.

10. குத்துச் சண்டைக்காரருக்கு குருட்டு யோகம்!

ரஷ்யநாட்டு தாஷ்கண்ட் மாநிலத்தில் உள்ள உஸ்பேக் திரைப்பட ஸ்டுடியோவில், ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டிருந்தார் டைரக்டர் **எடுவர்டு காசாடு ராவ்** என்பவர், அவர் எடுக்க இருந்த படத்தின் பெயர் தி சேலன்ஞ் **(The Challenge).** அதாவது சவாலுக்கு அழைத்தல் என்பதாகும்.

சோவியத் நாட்டின் சிறந்த குத்துச்சண்டை வீரர் ரிபாட் ரிஷ்கிவ் **(Rifat Riskiev)** எனும் வீரர், உலக நடு எடைப்பகுதி பிரிவில் வெற்றி பெற்று உலக வெற்றி வீரராகத் திகழ்ந்து, தன் தாயகத்திற்குப் புகழ் சேர்த்த பெருமையாளர். அவரை முன்மாதிரியாக வைத்து குத்துச் சண்டைப் போட்டி பற்றியேதான் அந்தப்படம் எடுப்பதாகத் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

கதாநாயகனாக நடிக்க ரிபட்ரிஷ்கிவ் போன்ற முகமும் உடலமைப்பும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தான் டைரக்டர் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எத்தனையோ ஆட்களைப் பிடித்து, ஒப்பனை போட்டுத் தேர்வு செய்தாலும் இறுதியில் எதுவும். பொருத்தமில்லாமலே போயிற்று.

எதிர்பார்த்த பலனும் கிடைக்கவில்லை. தேர்ந் தெடுக்கப்படுகிற அந்தக் கதாநாயகனுக்கு பயிற்சி அளிக்கக் காத்திருந்தார் ரிபட். இனிமேல் காத்திருக்க முடியாது என்ற முடிவில் ஒரு முடிவெடுத்தார் டைரக்டர்.

'யாரும் தேர்வுக்கு வேண்டாம். நீங்களும் பயிற்சி தர காத்திருக்க வேண்டாம். அந்தக் கதாநாயகன் வேடத்தை

நீங்கள் ஏற்றுக்கொண்டு நடித்துவிடுங்கள். எனக்கும் தேர்ந்தெடுக்கும் சிரமம் குறையும். உங்களுக்கும் பயிற்சி தரும் சிரமம் குறையும்' என்று பயிற்சியாளரையே தேர்ந்தெடுத்து விட்டார்.

நம்மவர்கள் என்றால், குத்துச்சண்டைக்காரருக்கு குருட்டு யோகம் அடித்து விட்டது பார்த்தீர்களா! என்று கேலிகலந்த கிண்டல் மொழிகளை அள்ளி வீசி மகிழ்ந்திருப்பார்கள். ஆனால், உண்மையான உழைப்புக்கு உண்மையான உரிய மதிப்பு கிடைத்தது பார்த்தீர்களா என்று அங்கே 'மனநிறைவு பெற்றார்கள். நாமும் அப்படியே எண்ணி மகிழ்வோமே!'

11. இந்தியாவிலும் இல்லாமல் இல்லை!

யார்வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம் இந்த நெடுந்தூரப் போட்டியில் என்ற அறிவிப்பு வெளியானது. ஓடி முடிக்கக்கூடிய தூரத்தின் அளவை பார்த்ததும், பார்த்த வேகத்தில் பின்புறமாகவே ஓடிப்போனவர்கள் அநேகம். நம்மால் முடியுமா என்று முன்வந்து முயல்வேகத்தில் ஓடி மறைந்தவர்களும் அநேகம்.

அப்படி அயரவைக்கும் அந்த ஓட்டப் போட்டியின் தூரம் என்ன? 160 கிலோ மீட்டர் தூரம்தான். ஒலிம் பிக் பந்தயத்தில் மாரதான் ஓட்டப் போட்டிக்குரிய தூரமே 40 கிலோ மீட்டர்தான். அதைவிட நான்கு மடங்கு தூரம் அதிகம் என்றால் நடக்கக்கூடிய காரியமா இது!

என்றாலும், போட்டி நடைபெறாமல் போகவில்லை. பயிற்சி உள்ளவர்கள், பலம் நிறைந்தவர்கள், பயமில்லாமல் ஒருகை பார்க்கலாம், என்று வந்தவர்களுடன் தொடங்கி, 24 மணிநேரம் கழித்து முடிவெல்லையை வந்தடைந்தார் ஒரு வீரர்.

இவரா முதலாவதாக வந்தார் என்றால் யாரும் நம்பவில்லை, நம்பவும் முடியவில்லை. இனிக்கும் இருபதுக்குள்ளான வயதுக்குரியராகவா அந்தவீரர் இருந்தார்? இல்லையே! முடிந்துபோன முதுமை என்கிறோமோ அந்த வயதுக்காரராகவே விளங்கினார்.

அவர் சமீபத்தில்தான் தனது 67வது பிறந்தநாளை மிகவும் விமரிசையாகக் கொண்டாடி முடித்தாராம்! அந்த 67 வயது இளைஞர் இதற்குமுன் ஓடி எங்கேனும் பரிசு பெற்றிருக்கிறார். வெளிநாட்டுப் பயணம் போயிருக்கிறாரா என்று கேட்டால்,

அவர் இதற்குமுன் எந்தப் போட்டிகளிலும் கலந்து கொண்டதே கிடையாதாம்.

160 கிலோ மீட்டர் தூரத்தை 24 மணி நேரத்திற்குள் ஓடிமுடித்த 67 வயதுக்காரரான வீரரின் பெயர் **K.S.** சாண்டு **(K.S. Chandu)** என்பதாகும். இந்திய நாட்டிலே இப்படியும் உடல் திறமும் உள்ள உரமும் உள்ள மக்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்; இந்தியாவில் நல்ல வீரர்கள் இல்லாமல் இல்லை.

இயற்கையே தந்த வளமான மலைப்பகுதிகளையும், வயல்வெளிகளையும், ஜீவநதிகளையும் வைத்துக் கொண்டு பஞ்சம், பசிக்கொடுமை, பற்றாக்குறை என்று பேசிக் கொண்டு தவித்துக் கொண்டிருக்கிறோமே, அதேநிலையில் தான் நாமும் விளையாட்டுத் துறையில் இருக்கிறோம்!

விளையாட்டு என்பது பொழுதை வீணடிக்கக் கூடிய, பொருளை விரயமாக்கக்கூடிய காரியமல்ல, ஏதோ சிறிய பரிசைப் பெறுவதற்காகவும், அதேநேரத்தில் பாராட்டைப் பெறுவதற்காகவும் செய்யக்கூடிய செயலுமல்ல. சக்திமிக்க, திறம் மிகுந்த, மக்களை உருவாக்கி உழைக்கும் வல்லமையை அவர்களுக்குக் கற்பித்து ஒற்றுமை உணர்வை வளர்க்கக்கூடிய வகையிலே அனுபவங்களைத் தந்து, சந்தோஷம் மிகுந்த சமுதாயத்தை உருவாக்கும் பயிற்சி மேடைதான் விளையாட்டுக்களாகும்.

ஒரு நாட்டின் செல்வம் என்பது பணத்தாலும் பொருளாலும் வருவதல்ல. சக்திமிக்க மக்களால்தான் நாட்டின் செல்வம் என்பதை நம்மை ஆள்பவர்கள் உணர்ந்து கொண்டால், இந்தியா உலகநாடுகள் திலகமாகத் திகழுமே! சக்திமிக்கவர்கள் இந்தியாவில் இல்லாமல் இல்லை அவர்களைப் பயன்படுத்துபவர்கள் தான் இல்லை. இல்லை இல்லை.

12. கிரிக்கெட்டில் ஆறு ஓட்டங்கள் ஏன் வந்தது?

கிரிக்கெட் ஆட்டத்தில் முக்கிய இடம் வகிப்பது விக்கெட்டுகள்தான். 22 கெஜ தூரத்திற்குள்ளாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் இரண்டு விக்கெட்டுகளைக் குறிபார்த்து, பந்தெறிந்து ஆடுபவர்கள் முயற்சிப்பார்கள். அப்படி எறியப்படும் பந்தை அடித்தாடுபவர்கள், தூரத்திற்குப் போவதுபோல அடித்தாடி, அதற்கிடையில், இரண்டு விக்கெட்டுகளுக்கிடையே இருவரும் மாறிமாறி ஓடி எடுக்கும் நிலையைத்தான் 'ஓட்டம்' (Run) என்று குறிப்பிடுவார்கள்.

ஒரு விக்கெட்டிலிருந்து 75 கெஜத்திற்கு அப்பால் எல்லைக் குறிக்கப்பட்டிருக்கும்; அவ்வாறு சுற்றிலும் எல்லையாகக் குறிக்கப்படும் மைதானம், பொதுவாக முட்டை வடிவ அமைப்பில் (Oval) அமைந்திருக்கும்.

பந்தடித்தாடும் அட்டக்காரார் ஒருவர், பந்தய மைதான எல்லைக்கு வெளியே பந்தை அடித்துப் போகவிட்டால்,அவருக்கு 4 ஓட்டங்கள் (Four) என்று அறிவிக்கப்படும். அவருக்குரிய குறிப்பேட்டில் ஓட்டங்களின் மொத்தம் என்றும் குறிக்கப்படும்.

பந்தய மைதானத்தின் எல்லைக் கோட்டுக்கு வெளியே போய் பந்து விழுமாறு அடித்துப் பந்தை அனுப்பினால் அதற்கு எத்தனை ஓட்டங்கள் தரவேண்டும்? இந்த பிரச்னை, ஆட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1904-ம் ஆண்டுவரை எழுவே இல்லை.

1904ம் ஆண்டு செஸ்டர்பீல்டு எனும் இடத்தில், டெர்பிஷயர் குழுவுக்கும் செசக்ஸ் குழுவுக்கும் கிரிக்கெட் போட்டி ஒன்று நடந்தது. செசக்ஸ் குழுவைச் சேர்ந்த P.A.

பெர்ரின் (P.Perrin) எனும் ஆட்டக்காரர் ஒரு ‘முறை ஆட்டத்தில்’ (One Inning) 343 ஓட்டங்கள் எடுத்தார்.

அந்த ஓட்டங்களில், 68 முறை மைதானத்திற்கு வெளியே பந்து போகுமாறு (Boundary) பந்தை அடித்தாடினார். அதில் என்ன விசேஷம் என்றால், 14முறை பந்தை அடித்தபொழுது மைதான எல்லைக்கு வெளியே சென்றுதான் (Out of Boundary) பந்து விழுந்தது. அதற்கும் 4 ஓட்டங்களேதான் அவர்களால் அளிக்கப்பட்டன.

என்றாலும், இந்த முறை மாறவே இல்லை. மைதானத்திற்கு வெளியே பந்தை அடித்தால் என்ன செய்வது என்று எண்ணி எண்ணி முடிவுக்கு வராமலேயே, ஆட்டக்காரர்களும் ஆடிக்கொண்டிருந் தனர்.

1904ம் ஆண்டு P.A. பெர்ரின் ஆடியபிறகு, 1906ம் ஆண்டு ஒரு புதிய விதியைக் கொண்டுவந்தனர். அதாவது மைதான எல்லைக்கு வெளியே பந்துபோய் விழுமாறு அடித்தாடினால் அதற்கு 6 ஓட்டங்கள் தரலாம் என்று 1906ம் ஆண்டு முடிவு செய்தனர். ஆனால் அந்த விதி முறை 1910ம் ஆண்டுவரை ‘மதில்மேல் பூனை போல’ அப்படியும், இப்படியும் என்பதுபோல பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆடப்பட்டது.

அந்தந்த மைதான அமைப்புக்கும் எல்லைக்கும் ஏற்ப அவர்கள் வைத்துக்கொண்டு ஆடினர். ஆஸ்திரேலியாவில் 1906ம் ஆண்டு காலத்தில், மைதானத்திற்கு வெளியே விழுமாறு பந்து அடிக்கப்பட்டால் அதற்கு 5 ஓட்டங்கள் தந்தும் ஆடினர்.

அதன் பிறகு 6 ஓட்டங்கள் என்று முடிவு செய்தனர். இந்த ஆட்ட அமைப்பின்படி அ. கிம்பளெட் என்பவர் 1936ம்

ஆண்டு ஆடியபொழுது, 18 முறை மைதானத்திற்கு வெளியே பந்து போகுமாறு (Boundary) அடித்தாடினார். அதில் 6 முறை மைதானத்திற்கு வெளியே பந்து போகுமாறு (Boundary) அடித்தாடினார். 'இது ஒரு முறை ஆட்டம்' (One Inning) நடக்கும் பொழுது நடந்தது.

ஆனால், 1968ம் ஆண்டு, ஸ்வேன் சீ (Swan Sea) என்னும் இடத்தில், கிளேமார்கன் குழுவிற்கும் நாட்டிங்காம்ஷயர் எனும் குழுவிற்கும் நடந்த போட்டியில், G. சோபர்ஸ் என்பவர் ஒரு புது சாதனையையே நிகழ்த்தினார்.

M.A. நாஷ் (M.A. Nash) என்பவர் எறிந்த பந்தை (ஒரே ஓவரில்) 6 முறை அடித்து, மைதானத்திற்கு வெளியே விழுமாறு 6x6-36 ஓட்டம் எடுத்தார் இதுவே இன்றும் உலக சாதனையாக இருக்கிறது.

13. லட்சியம் தோற்பதில்லை!

இங்கிலாந்து நாட்டிலே ஒரு கிரிக்கெட் ஆட்டக் காரர். வேகமும் விறுவிறுப்பும், மதியூகமும் மட்டற்ற ஆர்வமும் நிறைந்த ஆட்டக்காரர். ட. செஸ்டர் (Chester) என்பது அவர் பெயர்.

சிறப்பாக அவர் ஆடிக்கொண்டுவந்த திறமையைக் கண்டு, அவரது மாநிலத்தின் பிரதிநிதியாக ஆடுகின்ற வாய்ப்பினைப் பெற்றார். 1912ம் ஆண்டு அது. ஒர்செஸ்டர்ஷயர் எனும் குழுவில் ஒரு ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரபலமாக விளையாடிக் கொண்டிருந்தார் செஸ்டர்.

இந்த மாநில அளவு பிரதிநிதியாக விளையாடும் ஆட்டத்தோடு அவரது ஆசையும் லட்சியமும் நின்றுவிடவில்லை. இன்னும் அதிகத் திறமையை வளர்த்துக் கொண்டு, இங்கிலாந்து நாட்டின் சார்பாக ஆடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஓர் இனிய லட்சியத்துடன் விளையாடிவரும் நாட்களிலேதான், எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அவர் வாழ்க்கையிலே நடைபெற்றது.

இராணுவ வீரராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றார். அப்பொழுது மத்தியகிழக்குப் பகுதியிலே போர் ஏற்பட்டதால், போர்க்களத்திலே பணியாற்றவும் செஸ்டர் போகவேண்டியிருந்தது. போர்க்களத்திலே போரிடும் பொழுது, செஸ்டரின் லட்சியமே புதையுண்டுபோகும் வகையிலே, மீண்டும் ஒரு பய்ங்கர சோதனைபோன்ற நிகழ்ச்சி நடந்துவிட்டது.

ஆமாம். செஸ்டரின் வலது கையின் மணிக்கட்டுப் பகுதியை இழக்கவேண்டிய கொடுமையான நிலைமைக்கு

ஆளானார். வலது கையில் பாதி போனபிறகு, எப்படி கிரிக்கெட் விளையாடமுடியும்? கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்த புகழ்பெற்றுத் திகழவேண்டும் என்ற லட்சியம் மட்டும் பாழாகவில்லையே! கிரிக்கெட்டே ஆடமுடியாது என்ற அவல நிலையல்லவா ஏற்பட்டு விட்டது!

வெற்றிவாகை சூடித்தரவேண்டிய வலதுகை போனதால், செஸ்டர் வாடி வருந்தி, வேதனையில் படுத்துவிடவில்லை. ''என்னுடைய பெயர் கிரிக்கெட் ஆட்டத்தில் நிலைத்து நிற்கவேண்டும் என்பதுதானே எனது இலட்சியம். விளையாடித்தான் புகழ்பெற வேண்டுமா என்ன? வேறு வழியிலும் புகழ்பெற முடியுமே'' என்று வருந்திய அவரது உற்றார்க்கும் உறவினர்க்கும், நண்பர்களுக்கும்,நல்ல மனதுடன் ஆறுதல் சொல்ல வந்தவர்களுக்கும் செஸ்டர் பதில் கூறினார். பதட்டம் நீக்கினார்.

சொல்லிச் சொல்லி சுகம் கண்டு சோம்பித் திரியும் கூட்டத்தில் ஒருவராக செஸ்டர் விளங்கவில்லை. எல்லோரும் வாழ்த்தி வரவேற்கும்படியான நிலைமையில் பெயர்பெற்றுத் திகழ்ந்தார்! எப்படி என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா உங்களுக்கு!

1912ம் ஆண்டிலே அவர் கையிழந்தவராக ஆனார். அதன்பின், பத்தாண்டுகள் கிரிக்கெட் விதிகளையும். முறைகளையும், தவறு நேரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கசடறக் கற்றார். ஆட்டத்தை பிழையற நடத்திக் கொடுக்கும் நடுவராகத் தேர்வு பெற்றார். ஆமாம்! ஆட்டக்காரரைவிட மிகவும் பொறுப்பு வாய்ந்த இடத்திலல்லவா இடம் பிடித்துக்கொண்டார்.

1922ம் ஆண்டு அவர் கிரிக்கெட் நடுவராகத் தன் பணியைத் தொடங்கினார். ஏறத்தாழ 1000 முதல் தர

கிரிக்கெட் போட்டிகளுக்கு நடுவராக விளங்கினார். 48 டெஸ்ட் மேட்சுகளுக்கும் நடுவராகப் பணியாற்றினார்.

இவ்வாறு 30 ஆண்டுகள் கிரிக்கெட் நடுவராகப் பணியாற்றி, கிரிக்கெட் ஆட்டத்தில் மட்டுமல்ல, உலக சரித்திரத்திலும் 'சிறந்த நடுவர். மரியாதைக்குரிய நடுவர், திறமையான நடுவர்' என்ற புகழுடன் 1955ம் ஆண்டு, நடுவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

புகழ்பெற்ற நடுவராகப் பேறுபெற்ற செஸ்டர், கிரிக்கெட் ஆட்டத்துடன் இணைக்கப்பெற்ற புகழாளராகவே இன்றும் விளங்குகிறார் உள்ளத்தில் உறுதியும் உண்மையான உழைப்பும் இருந்தால், இலட்சியம் என்றும் தோற்பதில்லை என்ற சொல்லுக்கு சான்றாகத் திகழும் செஸ்டரை, நாமும் பாராட்டுவோம்.

14. எதிர் நீச்சல் எப்படித்தான் முடிந்ததோ!

ஆற்றிலோ குளத்திலோ, சற்று அலைபுரண்டு வரும் கடல் ஓரத்திலோ ஐந்து அல்லது ஆறடி தூரம் எதிர் நீச்சல் போடுவதற்குள் கைகால்கள் அசந்துபோய் குடைச்சல் எடுத்து விடுகின்றன. ஆற்றோடும் அலையோடும் போவதுகூடக் கொடுமைதான். ஆனால், ஒரு நீச்சல் வீரர் நிகழ்த்தியிருக்கும் சாதனையைப் பார்த்தால், இது நிஜமாக நிகழ்ந்த சம்பவமா என்று நினைக்கவும் சந்தேகப்படவும் அல்லவா தோன்றுகிறது!

அமெரிக்காவில் உள்ள நதி ஒன்று, அதற்கு மிசிசிபி என்பது பெயர். அந்த ஆற்றிலே நீந்தி சாதனை செய்ய வேண்டும் என்று விழைந்தார் ஒரு வீரர். பெயர் ஜான் V. சிக்மண்ட் என்பதாகும். அமெரிக்கநாட்டு செயின்ட் லூயிஸ் மாநிலத்தைச் சேர்ந்த வீரர்.

அந்த ஆற்றிலே குதித்து அவர் நீந்திய தூரம் 292 மைல்களாகும். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட நேரம் 89 மணி 42 நிமிடங்களாகும். 1940ம் ஆண்டு ஜூலை மாதம் ஜான் சிக்மண்ட் இந்த அற்புதமான அரிய சாதனையை ஏற்படுத்தினார்.

அரைமணி நேரம் தண்ணீரில் இருந்தாலே கண் சிவந்து, காதுகளில் தண்ணீர் புகுந்து எரிச்சலோடும் திணறலோடும் வெளியேற வைக்கும் நீச்சலில், 89 மணிநேரம் எப்படித்தான் ஜான்சிக்மண்ட் இருந்தாரோ தெரியவில்லை. அவருக்குள்ள உடல் திண்மையையும் உள்ள வலிமையையும் தான் இது காட்டுகிறது.

சாதனை நிகழ்த்த வேண்டுமானால், உன்னத உழைப்பும் கடுமையான பயிற்சியும், நீங்காத நினைவும், நிலையான மன உறுதியும் வேண்டும். வாழ்க்கையே ஒரு எதிர்நீச்சல் தானே. நீச்சலுக்குள் எதிர் நீச்சல்போட்ட வீரர் நமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவே விளங்குகிறார்!

15. இதயத் துடிப்பில் இருக்கிறது இரகசியம்!

நீண்ட தூரம் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகின்ற எல்லா ஓட்டக்காரர்களுமே வெற்றி பெற முடிவதில்லை. குறிப்பிட்ட ஒரு சில ஓட்டக்காரர்களே தொடர்ந்து வெற்றி பெறுகின்றார்கள. அதிலும் பத்துப் பனிரெண்டு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் ஓடி வெற்றிமாலை சூட்டிக் கொள்கின்றார்கள். அவர்கள் வயதுகூட, முதுமைகூட ஒன்றும் செய்துவிட முடிவதில்லை.

அதன் இரகசியம் இதயத் துடிப்பில்தான் இருக்கிறது. சாதாரண ஒரு மனிதனின் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு 72 முறை. இதுபோன்ற துடிப்புள்ள இதயத்தைக் கொண்டவர்கள் எந்தக்காலத்திலும் நெடுந்தூர ஓட்டத்தில் வெற்றிபெறவே முடியாது. ஏனெனில் அது சாதாரண இதயம்தான். சக்தி வாய்ந்த இதயமல்ல.

ஒருமுறை சுருங்கி விரிகின்ற இதயம், உடல் முழுவதற்கும் தேவையான இரத்தத்தைப் பீறிட்டுப் பாய்ச்சுகின்ற வலிமையுடையதாக இருக்கவேண்டும். அப்படி உள்ள இதயத்தின் துடிப்பு, நிமிடம் ஒன்றுக்கு மிகக் குறைவாகவே இருக்கும்.

இங்கே கொடுத்திருக்கின்ற வீரர்களின் பட்டியலையும் அவர்கள் இதயத் துடிப்பின் எண்ணிக்கையையும் பாருங்கள், பத்து தங்கப் பதக்கத்திற்குமேல் ஒலிம்பிக் பந்தயங்களில் நெடுந்தூரப் போட்டியில் வென்ற பாவோநர்மிக்கு 40 துடிப்புக்கள். எவ்வளவு கடுமையான போட்டியில் ஈடுபட்டாலும், அவரது துடிப்பு நிமிடத்திற்கு 50க்குமேல் போகாது என்று கணக்கிட்டிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

அதேபோல் அமெரிக்க ஓட்டக்காரர்

லெஸ்மேக்மிட்சல் - 43 தடவை.

ஜில்டாப்ஸ் என்பவருக்கு 48 தடவை.

ஜிம் ரேசர்டி என்பவருக்கு 55,

கிளென்கன்னிங்காம் என்பவருக்கு 48,

கண்டர்ஹேக் என்பவருக்கு 50.

இப்படி இதயத் துடிப்புள்ளவர்கள்தான் வெற்றி பெறமுடியும் என்றால், அவர்களுக்கு எப்படி இந்த இதயம் கிடைத்தது? கடுமையான, உண்மையான, நேர்மையான மனம் ஈடுபட்ட ஓட்டப் பயிற்சியினால் தான். பயிற்சியும் முயற்சியும்தான் ஒருவரை உயர்த்தும், வாழ்வாங்கு வாழவைக்கும்!

16. நடையும் நடைப் பழக்கமும்!

'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பாள் ஔவைப்பாட்டி, அதுபோலவே நடையும் நடைப்பழக்கம் என்று நாம் கூறலாம்.

வசதியுள்ளவர்கள் உடலை அடிமையாக்கி ஏவல்விட்டுக் கொண்டிருப்பார்கள். நோய்க்கு அவர்கள் அடிமையாகி அவதிப்படும் பொழுது, மருத்துவர்கள் கொஞ்சமாவது நடந்தால்தான் உடல் தேறும் என்று அபாய அறிவிப்புக் கொடுத்தவுடன், அவர்கள் காலையும் மாலையும் கடலோரப் பகுதிகளில் அவதிப்பட்டுக் கொண்டு நடப்பதைப் பார்த்தால், நமக்கு சிரிக்கத் தான் தோன்றும்.

நடக்கக் காசு கேட்பவர்களுக்கு நலம் எப்படிவரும்! இயற்கையாக வாழ்ந்து உடலை உழைப்புக்கு உட்படுத்தி வாழ்பவர்களே நோயற்ற வாழ்வு வாழ முடியும். நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமன்கூட தினமும் காலாற ஒருமைல் தூரமாவது நடந்து சென்ற பிறகுதான், தனது ஆராய்ச்சிச் சாலைக்குள் நுழைவாராம்.

நடை எவ்வளவு நலன்களை நல்குகிறது தெரியுமா? இங்கே பாருங்கள். ஒரு 92 வயது இளைஞரை! இந்த வயதில் எந்த மூலையில் படுக்கலாம். எப்படி இருமலாம் என்று கூனிக் கிடக்கின்ற நிலைமையல்லவா இருக்கும்!

இந்த 92 வயது இளைஞர், ஜார்ஜ் காவோ என்பது அவர் பெயர். ஒரு உலக சாதனை செய்து வைத்திருக்கிறார். அதாவது அவர் 504 மைல் தூரத்தை நடந்து ஒரு நீண்ட பயணம் செய்திருக்கிறார், இந்த நீண்ட தூரத்தை அவர் நடந்து முடிக்க எடுத்துக் கொண்ட நாட்கள் 60.

60 நாட்கள் நடந்து 504 மைல் தூரத்தை முடித்து ஒரு உலகசாதனை செய்த அவருக்கு உடல் நலம் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்க வேண்டும்! நமது மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்ற வேண்டாமா!

அற்ப ஆசைகளுக்கு அடிமையாகி, அரட்டைக்கும், குறட்டைக்கும், அசட்டைக்கும் ஆளாகி, வீணாக வாலிப சக்தியை வீண்செய்கின்ற இளைஞர்கள், உலகப் புகழ்பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டால், அவர்கள் வாழ்வு எவ்வளவு ஒளிமயமாகத் துலங்கும் தெரியுமா! தன்னை அறிந்தவன் தலைவன்! எவ்வளவு உண்மை பார்த்தீர்களா!

17. அதிர்ச்சி என்றால் அப்படி ஒரு அதிர்ச்சி

'கிரிக்கெட் ஆட்டம் என்றால், ஏதோ மேயப்போகும் மாடு மெதுவாக அசைந்தசைந்து செல்வதுபோல, மிக மெதுவாக நடைபெறும் ஆட்டம். ஒருவர் பந்தை எறிய, மற்றொருவர் அடிக்க, பந்து போகும் திசையில் உள்ளவர் மட்டும் பரபரப்புடன் பந்தைப் பிடித்து எறிய, இவ்வாறு நாள்முழுவதும் நடைபெறும் ஆட்டம்' என்று வர்ணிப்பவர்கள் பலர் உண்டு.

'மிகவும் டல்லான ஆட்டம்' மசமசவென்று எருமைமாட்டு மேலே மழை பெய்வது போல என்று ஏளனப்படுத்திப் பேசுவோரும் உண்டு. ஆனால் ஆயிரக்கணக்கானோர் நாள் கணக்காக ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டு, உற்சாகமாகப் பார்த்து மகிழ்கின்றார்கள் என்றால், அதில் ஏதோ அற்புதமான கட்டம். ஆச்சரியமான சூட்சமம் என்னவோ இருக்கின்றது என்றுதானே அர்த்தம்!

சில சமயங்களில் வேகமாக முடிவு பெற்று விடுகின்ற ஆட்டமாகவும் அமையும். மற்றும் சில நேரங்களில் திகில் உண்டாக்குகின்ற, திரில் **(Thill)** ஏற்படுத்துகின்ற வகையாலும் ஆட்டம் உச்சகட்டத்தை அடைவதுமுண்டு.

எப்பொழுதாவது ஏற்படுமா என்றால், எப்பொழுதும் ஏற்படலாம் என்ற அளவில் ஏராளமான சுவையான நிகழ்ச்சிகள் கிரிக்கெட் வரலாற்றிலே இடம் பெற்றிருக் கின்றன. அவற்றில், அதிர்ச்சி தந்த ஒரு ஆட்டம் பற்றி இங்கே காண்போம்.

1882 ஆம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டிலே ஓவல் மைதானத்திலே நடந்ததுதான் அந்த அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி.

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நடைபெற்ற போட்டி அது. ஆஸ்திரேலியா ஆடிமுடித்து விட்டு, பந்தெறியும் வாய்ப்பில் இருந்தது. இங்கிலாந்து 85 ஓட்டங்கள் எடுத்தால், வெற்றி பெறலாம் என்ற நிலையில் ஆட்டத்தை ஆடிக்கொண்டிருந்தது.

இங்கிலாந்தே வெற்றி பெறவேண்டும் என்று விரும்பாத இங்கிலாந்து ரசிகர்கள் இருப்பார்களோ? எல்லோருடைய நினைவிலும் தங்கள் தாயகமே வெற்றி பெறவேண்டும் என்று தணியாத ஆவலில், தணல் மேல் உட்கார்ந்திருப்பவர்கள் போல ரசிகர்கள் அமர்ந்திருந்தனர்.

அவர்கள் பிரார்த்தனையை ஆண்டவன் கேட்கவில்லையோ என்னவோ! 60 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 பேர் பலியாகி, ஆட்டமிழந்து மைதானத்தை விட்டு வெளியேறி வந்துவிட்டனர். இன்னும் 5 விக்கெட்டுகள் தான் மீதி இருக்கின்றன என்று கொஞ்சம் மனம் தளர்ந்த நிலையிலும் தைரியப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது, மடமட என்று மற்ற நான்கு விக்கெட்டுகளும் வீழ்ந்து போயின.

இங்கிலாந்து குழுவில் இருப்பது ஒரே ஒரு விக்கெட்டுதான். வெற்றி பெறுவதற்காக ஓடி எடுக்க வேண்டிய ஓட்டங்களோ இன்னும் 10 இருந்தன. 'திக் திக்' என்று இதயம் துரிதகதியில் அடித்துக்கொள்ள ஆயிரக்கணக்கானோர் என்னநடக்குமோ என்று எண்ணி மயங்கும்போது, ஒரு ரசிகர், இங்கிலாந்தே வெல்ல வேண்டும் என்று எண்ணி எண்ணி மருகிய ரசிகர். பாவம்! வேகமாக அடித்துக் கொண்டும் துடித்து கொண்டும் ஓடிய இதயத்தினை அதிர்ச்சிக்கு மேலும் ஆளாக்கிக் கொண்டார்.

அதனால் என்ன நடந்தது என்று எண்ணுகின்றீர்கள்! அதிர்ச்சிக்கு ஆளான அந்த ரசிகர் அதே இடத்தில் மாரடைப்பால் இறந்து போனார்!

ஆட்டத்தைப் பார்த்து ரசிக்க வந்த ரசிகரை, அப்படி என்ன அதிர்ச்சி அலைக்கழித்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்! அதையே உணர்ச்சிப் பிழம்பான உச்சநிலை (Tension) என்றனர். திகில் நிறைந்த நிலை (Thrill) என்றனர். ஆட்ட அதிர்ச்சியே அவரின் ஆவியைப் போக்கடித்து விட்டது.

அப்புறம் என்ன? 10 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இருந்த இங்கிலாந்தின் கடைசி ஆட்டகாரர் ஆடினார். முதல் பந்தெறியில் (Ball) 2 ஓட்டங்கள் எடுத்து, ஆஸ்திரேலியர் வீசிய அடுத்த பந்தெறியில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தோற்றது, ஆஸ்திரேலியா அந்த ஆட்டத்தில் வென்றது.

என்றாலும், அப்படி ஒரு அதிர்ச்சியை உண்டு பண்ணி, ஆளையே மரணத்திற்குள்ளாக்கும் வேகமும் கிரிக்கெட் ஆட்டத்திற்கும் இருக்கிறது என்று எண்ணத்தானே தோன்றுகிறது.!

18. இதுவல்லவோ பெருந்தன்மை!

விளையாட்டுக்களில் பெருந்தன்மையானது மிகவும் முக்கியம். அது வாழ்க்கைக்கு வேண்டாமா, விளையாட்டுக்கு மட்டுந்தான் வேண்டுமா, என்றால் விளையாட்டும் வாழ்க்கையும் வேறு வேறு என்று எண்ணினால்தானே! விளையாட்டில் பெறுகின்ற பண்பும் பழக்கமும், வாழ்க்கைக்கும் அப்படியே பயன்தருவதால்தான், விளையாட்டுக்கள் சமுதாயத்திலே முக்கிய இடத்தை வகிக்கின்றன.

பெருந்தன்மை நிறைந்தவர்களையே நாம் பண்பாளர்கள் (Gentlemen) என்கிறோம். பெருந்தன்மை யான செயல்களில் ஈடுபடுவதினால், பங்கு பெறுபவர்கள், பார்வையாளர்கள், போட்டிகளை நடத்துகின்றவர்கள் எல்லோருமே மனதிருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றார்கள். அத்தகையவர்களைத் தேர்ந்தெடுத்து, பண்பாளர் பரிசு (Fair Play Award) என்பதாகவும் வழங்குகின்றார்கள்.

அத்தகைய இனிய பரிசுகளை இரண்டு ஆட்டக்காரர்களுக்கு வழங்கி யுனெஸ்கோ ஸ்தாபனம் கௌரவித்தது. அப்படி அந்த இரண்டு ஆட்டக்காரர்களும் என்னதான் செய்துவிட்டார்கள் என்று அறிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றதல்லவா!

முதலாவது விளையாட்டு வீரர் போலந்து நாட்டைச் சேர்ந்த விளோடிசிமியர்ஸ் லுபான்ஸ்கி (Wlodzimierz Lubanski) என்பவர். உலகக் கால்பந்தாட்டப் போட்டியின்போது ஆட்டத்திற்கிடையில் நடந்து கொண்ட விதத்தால் இப்போது பெற்றார்.

உலகக் கால்பந்தாட்டப் போட்டியில் டென்மார்க்கு நாடும் போலந்து நாடும் போட்டியிட்டது. அப்பொழுது

போலந்து நாட்டு சிறந்த ஆட்டக்காரரான லுபான்ஸ்கி, டென்மார்க்குத் குழுவின் இலக்குக்கு அருகிலே பந்துடன் வந்துவிட்டார். மிக வேகமாக உதைத்தால் எளிதாகப் பந்து இலக்கிற்குள் சென்றுவிடும் என்ற வசதியான வாய்ப்பான நிலையில் அவர் இருந்தும், பந்தை உதைக்கவில்லை. பந்தும் இலக்கினுள் போகவில்லை, ஏன் அவர் அப்படியே நின்று விட்டார்?

டென்மார்க்குக் குழுவின் இலக்குக் காவலர் தடுமாறிக் கீழே விழுந்து கிடக்கிறார். பந்தை உதைத்தால் அவருக்குக் காயம் ஏற்படும். அதனால் ஆபத்து நேரிடும் என்று பயந்து ஒதுங்கி நின்றார். தன்குழு வெற்றி வாய்ப்பினை அந்த சமயத்தில் இழந்தாலும், எதிர்க்குழு ஆட்டக்காரர் ஆபத்து இன்றி தப்பித்துக் கொண்டாரே! அதில் அவருக்கு சந்தோஷம்.

எதிர்த்து விளையாடுபவர்களை எப்படியாவது கீழே இடறிவிட்டு, தள்ளிச் சாய்த்து மிதித்து துவைத்தாவது வெற்றிபெற வேண்டும் என்ற நினைவுடனே காலம் பார்த்து விளையாடும் ஆட்டக்காரர்கள் மத்தியிலே, எதிர் ஆட்டக்காரரும் நமது சகோதரரே; அவரும் நம்மைப் போல்தானே. எந்த விபத்தும் யாருக்கும் நேரக்கூடாது என்று பெருந்தன்மையான நினைவுடன் பண்பாளராக நடந்துகொண்ட லுபான்ஸ்கிக்கு பண்பாளர் பரிசினை அளித்து யுனெஸ்கோ பாராட்டியது.

அதுபோலவே இன்னொரு போலந்து ஓட்டக்காரரும் இந்த பரிசினைப் பெற்றிருக்கிறார். அவர் பெயர் ரிசார்டு போட்லாஸ் என்பதாகும். (**Rhszard Podlas.**) இந்த சிறந்த ஓட்டக்காரர் உலகக் கோப்பைக்கான ஓட்டப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் ஓடி முதல் பரிசு பெற்றவராவார். அவர் ஐரோப்பிய நாடுகளின் சார்பாக ஒட்டத்தில் பங்கு பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றார்.

அதற்கான தேர்வோட்டப் போட்டியில் (Heat) பங்குபெற வந்தபோது, தன்னைவிட பெல்ஜியம் நாட்டு வீரரான அல்போன்ஸ் பிரிஜென்டென்பக் (Alfons Brijindenbach) என்பவர் சிறந்த போட்டியாளர் என்பதிலே அவர் உறுதியாயிருந்தார்.

அந்தப் போட்டியில் நிச்சயம் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையை நிறைய வைத்திருந்தார். ஆனால் அந்தப் போட்டியின்போது அல்போன்சுக்குக் காலில் காயம் ஏற்பட்டு, வழக்கமாக வேகமாக ஓடமுடியாது என்ற நிலையில் இருப்பதை உணர்ந்த ரிசார்டு, அவர் அந்த ஓட்டத்தில் மூன்றாவதாக வந்தால் தேர்ந்தெடுக்கப் படுவார் என்பதையும் அறிந்து கொண்டார். அதனால் அவர் நான்காவதாக ஓடி வந்து அல்போன்சுக்கு தன்னிடத்தை வழங்கி மனமகிழ்ச்சி கொண்டார்.

போட்டிக்குத் தவறான வழிகளையே பயன்படுத்து பவர்கள்இடையே, நல்ல மனப்போட்டி வேண்டும். அதுவும் பண்பான போட்டி வேண்டும் என்று தனது குழுவில் உள்ள ஒருவர் சிறந்த வெற்றிபெற வாய்ப்பையும் வசதியையும் வழங்கிய ரிசார்டும் பண்பாளர் பரிசு பெற்றார் என்றசேதி, விளையாட்டு உலகில் வழிகாட்டும் அற்புத சம்பவங்கள் அல்லவா?

19. தாங்கமுடியாதவருக்கு தண்டனை!

உலகக் கோப்பைக்கான கால் பந்தாட்டப் போட்டியில் ஓர் உச்சக் கட்டம். ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இருக்கையில் அமர்ந்திருக்க முடியாத நிலையில், உணர்ச்சிப் பெருக்கேறிய சூழ்நிலையில் அமர்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

இத்தாலிய நாட்டுக் குழுவினர் ஆடுகளப் பக்கத்திலே பந்து விளையாடப்படுகிறது. இதோ! இத்தாலியக் குழுவினரின் இலக்கு ஓரத்தில் பந்து வந்துவிட்டது. அதைத் தள்ளி விடுகிறார் எதிர்க்குழு ஆட்டக்காரர். அதனைத் தடுக்க வந்த இத்தாலிய நாட்டுக் குழுவின் இலக்குக் காவலர் பாய்ந்து விழுந்தார்.

பந்து அவர் கையில் படவில்லை. அதோ! பந்து மெதுவாக இலக்கை நோக்கி உருண்டு சென்று கொண்டிருக்கிறது. அதனைத் தடுக்க வேறு எந்த ஆட்டக்காரரும் வரஇயலாத நிலையில், ஆங்காங்கே ஆட்டக்காரர்கள் இருக்கின்றனர். இன்னும் ஒருசில வினாடிகளில் பந்து இலக்கினுள் சென்றுவிடும். பிறகு, இத்தாலி தோற்றுப் போய்விடும்.

எல்லா ரசிகர்களும் இந்த நிலைமையும், பந்து போகின்ற நிலையையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர். மனதிலே பரபரப்பு! தாங்கள் போய் தடுத்து விடலாம் என்றால் முடியுமா! மனதுக்குள்ளே குறு குறுத்தவண்ணம் அல்லாடிக் கொண்டிருக்கையில், துப்பாக்கி வெடித்தது போல் ஒரு சத்தம். படீர் என்று வெடிக்கும் மற்றொரு சத்தம்.

என்னவென்று எல்லோரும் அச்சத்துடன் பார்க்கின்றனர். கைத் துப்பாக்கியுடன் ஓர் இளைஞன் பார்

வையாளர் பகுதியில் நிற்கிறான். இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருந்த பந்து வெடித்துக் கிடக்கிறது. அச்சமும் ஆச்சரியமும் நிரம்பிவழிய, எல்லோரும் அவனையே பார்க்கின்றனர். அதிகாரிகள் பலர் ஓடிவருகின்றனர். அவனைக் கைது செய்துகொண்டு போகின்றனர்.

அந்த இளைஞன், பாஸ்டியா (Bastia) என்பது அவன் பெயர். அவன் கூறுகிறான். ''இத்தாலி நாட்டுக்குழுவின் ரசிகன் நான். இத்தாலியக் குழுவே வெல்ல வேண்டுமென்று நான் விரும்பினேன். வேண்டிக் கிடந்தேன். விளையாட்டை ஆவலுடன் பார்த்துக்கொண்டு வந்தேன். தடுப்பவர் யாருமின்றி அந்தப் பந்து இத்தாலியக் குழுவின் இலக்கிற்குள் போவதை என்னால் சகிக்க முடியவில்லை. என்னால் தடுக்கவும் முடியாது. நிச்சயம் பந்து இலக்கிற்குள் செல்கிறது என்பதை என்னால் தாங்க முடியவில்லை. உடனே என் கைத்துப்பாக்கியை எடுத்து பந்தை சுட்டுவிட்டேன். பந்து இலக்கிற்குள் போகவில்லை. இத்தாலியக் குழுவை, நான் விரும்பும் எனது குழுவை, தோல்வியிலிருந்து தடுத்து விட்டேன்'' என்று அந்த இளைஞன் தன்னை விசாரித்த அதிகாரிகளிடம் விளக்கினான்.

பாஸ்டியா நோக்கத்தைப் புரிந்து கொண்டாலும், அவனது நோக்கம் யாருக்கும் தீங்கிழைப்பதாக இல்லை என்று தெரிந்து கொண்டாலும், அந்த இளைஞன் தண்டிக்கப்பட்டான், அதாவது முறையாகத்தான்.

பயங்கரமான ஆயுதம் ஒன்றை அனுமதி இல்லாமல் வைத்திருந்தான் என்பதற்காக பாஸ்டியாவுக்கு மூன்று மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. விளையாட்டை விளையாட்டு என்று எண்ணாமல், அதுவே பேரிழப்பு, பெரிய காரியம் என்று எண்ணிய பாஸ்டியா, பரிதாபமாக சிறைக்குள் புகநேர்ந்தது.

ஆகவே, உணர்ச்சி வசப்படாத நிலையில் நாம் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்ற உண்மையை நாம் உணர்ந்து வாழவேண்டும். ஏனெனில், நமது வாழ்க்கையானது எப்பொழுதும் நாம் எதிர்பாராத நிகழ்ச்சிகளையே நமக்கு அளிக்கிறது, அதனைத் தாங்கிக் கொள்ளக்கூடிய உடல் சக்தியையும், மனஆற்றலையும் தான் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு தாங்கிக்கொள்ள முடியாது போனால், தவறு இழைக்கத்தான் நேரிடும். தண்டனை பெறத்தான் நேரிடும் இதற்கு பாஸ்டியா சம்பவம் ஒரு பாடமாக அமைகிறது அல்லவா! மனதையும் உடலையும் பக்குவப்படுத்தவும், பண்படுத்தவும்தான் விளையாட்டுக்கள் உதவுகின்றன. விளையாட்டு உலகிலே இப்படிநடந்து கொண்டால், வாழ்க்கையை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்! பகலிலே பாதை தெரியவில்லை என்றால் இரவில் எப்படி முடியும்! இதுதான் பாஸ்டியா நமக்கு விளக்குகின்ற பாடமாகும்.

20. தவறும் தண்டனையும்!

விளையாட்டுப் போட்டிகள் நடக்கும்பொழுது, ஆட்டக்காரர்கள் உணர்ச்சி வசப்பட்டு, வெற்றிபெறும் நோக்கத்துடன் விதிகளுக்குப் புறம்பான போக்கில் ஈடுபடுவதுண்டு, அவ்வாறு செய்வது தவறு என்பதை உடனே சுட்டிக் காட்டித் திருத்திடத்தான் நடுவர்களை நியமித்திருக்கின்றார்கள்.

விசில் அடித்து தவறை சுட்டிக் காட்டித் திருத்துகின்ற முறை ஒன்று. தவறிழைப்பவர் திருந்தாமல், மீண்டும் அதே தவறை வேண்டுமென்றே செய்யும் பொழுது, எச்சரிக்கை தந்து ஆடச்செய்வது இரண்டாவது முறை. அதே தவறை தொடர்ந்து செய்து தரக் குறைவாக நடந்து கொள்பவர்களை, ஆட்டத்தை விட்டே வெளியேற்றி விடுவது மூன்றாவது முறை.

ஆக, தவறுக்குரிய தண்டனையை உடனே தந்தால் தான் விளையாட்டும் செழிக்கும். விளையாட்டுத் தரமும் பிழைக்கும். ஆட்டக்காரர்களின் தவறும் மறையும். ஓர வஞ்சகம் செய்பவர்கள் நடுவராக இருந்தால், விளையாட்டுத்துறை உருப்படுமா என்ன?

பழங்காலத்தில், கிரேக்கர்கள் தாங்கள் நடத்திய ஒலிம்பிக் போட்டிகளில் தவறுக்குத் தண்டனை தருவது பற்றி ஒரு புதுமுறையைக் கையாண்டிருக்கிறார்கள்.

மல்யுத்தமும், குத்துச்சண்டையும் இரண்டறக் கலந்த பங்கராஷியம் என்ற போட்டிகளுக்கு நடுவராக இருந்தவர்கள், கையிலே நீண்ட தடி வைத்திருந்தார்கள். அந்தத் தடியின் முனையானது கூரான இரும்புக் கம்பியினால் ஆக்கப்பட்டிருக்கும்.

போட்டியாளர்கள் போட்டி நேரத்தில் தவறு இழைத்தால், அந்த நடுவர்கள் தவறிழைப்பவரின் கழுத்து பாகத்தில், அந்தத் தடியின் கூர்முனையால் குத்திவிடுவார்கள். வலிதாங்காத வீரன் உடனே விலகிக்கொள்வான். கழுத்தில் மட்டுமல்ல, தவறைச் சுட்டிக்காட்டி, தவறுக்குள்ளானவரை விடுவிக்க எது சாதகமான இடம் என்று அறிந்து, தவறிழைப்பவரின் உடலில் குத்துவார்களாம். பிறகு எப்படி தவறு மீண்டும் முளைத்தெழும்?

விளையாட்டை நடத்துபவர்கள் நடுநிலையாளர்களாக விளங்கி, நடுவர்களும் சிறந்த நீதிபதிகளாக பணியாற்றி விட்டால், விளையாட்டுத் துறை எப்பொழுதும் மக்களை சீர்திருத்தும், செம்மைப்படுத்தும், வாழ்வாங்கு வாழவைக்கும்.

21. முயன்றால் நிச்சயம் முடியும்!

சதுரங்க ஆட்டம் ஆடுவதென்பது மிகவும் சிரமமான காரியம்தான். அதே நினைவுடன், அங்குமிங்கும் திரிகின்ற மனதை அடக்கி, உடலைக் கட்டுப்படுத்தி, ஒன்றுபட்ட மனதுடன் சிந்தித்து ஆடவேண்டும் என்பது யாவரும் அறிந்ததே!

தன்முன்னால் அமர்ந்து ஆடுகின்ற எதிராட்டக் காரருக்கே இந்த நிலை என்றால், இங்கே ஒரு ஆட்டக்காரர் 560 ஆட்டக்காரர்களை எதிர்த்தாற் போல் உட்கார வைத்துக் கொண்டு. அத்தனை பேர்களுடனும் போட்டியிட்டு சதுரங்கம் ஆடியிருக்கிறாரே! அது எப்படி அவரால் ஆடமுடிந்தது!

ஆச்சரியமாக இல்லையா! ஸ்விட்சர்லாந்து நாட்டு மாணவனான அந்த சதுரங்க விளையாட்டு வீரனின் பெயர் வெர்னர் ஹக் (Werner Hug) என்பதாகும். 27 வயது நிரம்பிய அந்த இளைஞன் ஏற்கனவே ஒருமுறை இளையோர் சதுரங்கப் போட்டியில் (Junior) உலக வெற்றி வீரனாக வந்தவன். தனது திறமையை விளக்கும் வகையில்தான் அந்தப்போட்டியில் கலந்து கொண்டான்.

லூசர்னி என்னும் இடத்தில் அந்தப்போட்டி நடைபெற்றது. வரிசை வரிசையாக 560 சதுரங்க விளையாட்டு வீரர்கள் அமர்ந்து ஆட ஆரம்பித்தனர். ஒவ்வொரு மேஜைக்கும் முன்னே போய்நின்று ஒரு காயை நகர்த்திவிட்டு அடுத்த மேஜைக்கு ஆடப் போய்விடுவான். அதற்கு வெர்னர் ஹக் எடுத்துக்கொண்ட நேரம் ஐந்தே வினாடிகள்தான்.

இப்படி ஓடி ஓடி அத்தனை பேருடனும் ஆடியபிறகு அத்தனை ஆட்டங்களின் முடிவுகள் எப்படி இருந்தன தெரியுமா? 560 ஆட்டங்களில் 385 பேர்களை வென்றான். 126 ஆட்டங்களை வெற்றிதோல்வியின்றி சமமாக முடித்தான்.

49 ஆட்டங்களில் தோற்றான். அந்த 27 வயது வீரன் ஆடிய நேரம் எவ்வளவு தெரியுமா? 25 மணி நேரம். இவ்வளவு நேரம் இத்தனைப் பேர்களுடனும் நினைவாற்றலுடன் ஆடி விளையாடியது ஓர் உலக சாதனையாகி விட்டது.

ஆமாம்! 560 பேர்களுடன் 25 மணி நேரம் ஆடி 5 வினாடிக்கு ஒருமுறை ஒரு மேஜைக்குச் சென்று ஆடியபோது நடந்த தூரம் 30 கிலோ மீட்டர் என்றும் கணக்கிட்டிருக்கின்றார்கள். இதுவும் புதிய சாதனைதானே!

இதற்கும் முன்னர் ஒரு உலகசாதனை இருந்தது. அவர் செக்கோஸ்லோவோகியா நாட்டு வீரர் **விளாஸ்டிமில் ஹொர்ட்** ஆவர். 550 பேர்களை எதிர்த்து ஆடினார். அந்த சாதனையைத்தான் வெர்னர் ஹக் முறியடித்தான். இந்த இளம்வயதில் இப்படி ஒரு சாதனையைப் பொறித்த வெர்னரைப் பாராட்டுவோம். நாமும் முயலலாம். முயன்றால், அதுவும் எண்மையாக முயன்றால் முடியாதது உண்டோ!

22. பரிசும் பாராட்டும் சும்மா வருமா!

ஸ்வீடன் தேசத்திலே ஒரு போட்டி நடத்துகின்றார்கள். அந்தப் போட்டியில் வெற்றிபெறும் வீரனுக்கு ஸ்வீடன் வீரன் அதாவது ஸ்வீடன் நாட்டு வீரமகன் எனும் புகழுக்குரிய பட்டம் **(Swedish Classic)** ஒன்றையும் தருகின்றனர்.

அந்தப்பட்டம் பெறுவதற்குரிய போட்டிகள் என்னென்ன? என்று அறிந்தால் இந்த நான்கு போட்டிகளில் எப்படித்தான் கலந்து கொள்ளமுடியும் என்றுதான் திகைக்கத் தோன்றுகிறது.

நடத்தப் பெறுவது நான்கு போட்டிகள்.

3 கிலோமீட்டர் நீச்சல் போட்டி.

30 கிலோ மீட்டர் தூரம் நெடுந்தூர ஓட்டப் போட்டி.

85 கிலோ மீட்டர் தூரம் சறுக்குக் கட்டை மீது பனித்தரையில் செல்லல்.

300 கிலோ மீட்டர் தூரம் சைக்கிள் போட்டி.

போட்டியிடுகின்றவர் அனைவரையும் ஒருசேர போட்டியிடச் செய்து, அவர்களிலே முதலாவதாக வருகின்ற வீரர்களுக்கு பட்டமும் பரிசும் தருகின்றனர். நம்மால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!

நல்ல உடல் வலிமையும், நிறைய நெஞ்சுரம், **(Stamina),** வளமான பயிற்சியும், முடியும் என்ற தன்னம்பிக்கையும், உடையவர்களே இதில் பங்கு பெற்று போட்டியிடமுடியும்! முதலாவதாக வருகின்றவர் உண்மையிலேயே திறமைசாலிதான்! நாட்டின் தலையாய வீரன் என்ற பெயர் சும்மா வருமா என்ன?

23. வார்னிஷ் விளையாடுகிறது!

கிரிக்கெட் ஆட்டத்தில், எதிராட்டக்காரர் காத்து நின்று ஆடுகின்ற விக்கெட்டை, பந்தால் அடித்து வீழ்த்தி, பந்தடித்தாடும் ஆட்டக்காரரை ஆட்டமிழக்கச் செய்வதுதான் முக்கிய நோக்கம் என்பது எல்லோரும் அறிவார்கள்.

ஆனால், நடந்தது என்ன? அதைத் தொடர்ந்து நடுவர் அளித்த முடிவுதான் என்னஎன்று நீங்கள் அறிந்தால், மிகவும் ஆச்சரியப் படுவீர்கள். இப்படி ஒரு நீதியா என்று எரிச்சல் அடைவதுடன், நடுவரைக் 'கன்னா பின்னா' என்று பேசவும் தலைப்படுவீர்கள்.

அப்படி என்ன நிகழ்ந்தது என்று கேட்கின்றீர்களா? நியூசவுத் வேல்ஸ் என்ற குழுவிற்கும் விக்டோரியா என்ற குழுவிற்கும் இடையே கிரிக்கெட் போட்டி ஒன்று ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

அந்தப் போட்டியில், ஒரு பந்தெறியாளர் (Bowler) எறிந்த பந்தானது, எதிராளி காத்து நின்ற விக்கெட்டில் மோதி, நடுக்கம்பான குறிக்கம்பைத் (Stump) தள்ளி விழச்செய்து விட்டது.

விக்கெட் விழுந்து விட்டால், அவர் ஆட்டமிழந்தார் என்று நடுவர் அறிவித்துவிட வேண்டியதுதானே! ஆனால், அந்த அந்த நடுவரே ஆட்டமிழக்கவில்லை (Not out) என்று அறிவித்து விட்டு, அந்தப் பந்து 'முறையிலா பந்தெறி' (No Ball) என்றும் கூறிவிட்டார்.

ஏன் அப்படி அறிவித்தார் என்று பார்த்தோமானால், விக்கெட்டில் இருந்த மூன்று குறிக்கம்புகளை இணைக்கும் இணைப்பான்கள் (Bails) கீழே விழவில்லை, இணைப்பான்கள் கீழே விழுந்தால்தான் விக்கெட் விழுந்தது என்று அறிவிக்கவேண்டும் என்ற ஒரு விதி இருக்கும் பொழுது, நடுவர் விதிக்கு மாறாக மீறி எவ்வாறு அறிவிப்பார்!

ஆனால், இணைப்பான்கள் நடுக்கம்பு விழுந்த பிறகும் கீழேவிழாமல் இருந்ததே அது எப்படி?

அதுதான் அனைவருக்கும் மர்மமாக இருந்தது. ஏன் இணைப்பான்கள் கீழே விழவில்லை? ஏதாவது மந்திரமா என்று எல்லோரும் எண்ணியபொழுது, மர்மம் வெளிப்பட்டது. அத்தனை மர்மத்திற்கும் காரணம் வெயில்தான் என்பது வெளியானதும், ஆச்சரியத்தில் எல்லோரும் அயர்ந்தே போனார்கள்.

மூன்று குறிக்கம்புகளையும் இணைக்கின்ற இரண்டு இணைப்பான்களும் வெயிலின் காரணமாக, ஒட்டிக் கொண்டன. அதாவது, இணைப்பான்களின் மேல் ஒட்டியிருந்த வார்னிஷ் வெயிலில் உருகி, இணைப்பான்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அதனால்தான் இணைப்பான்கள் கீழேவிழவில்லை. அடித்தாடிய பந்தடி ஆட்டக்காரர் (Batsman) ஆட்டம் இழக்கவில்லை. அதிர்ஷ்டக்கார ஆட்டக்காரர் தான் அவர்!

வார்னிஷ் வாழ்க்கையில் மட்டும் விளையாட வில்லை, கிரிக்கெட் ஆட்டத்திலும் விளையாடி இருக்கிறது பார்த்தீர்களா?

குறிப்பு: குறிக்கம்புகள் வீழ்ந்தாலும், விழாவிட்டாலும் இணைப்பான்கள் கீழே விழுந்தால், அந்த விக்கெட்டைக் காத்து ஆடக்கூடிய ஆட்டக்காரர் ஆட்டமிழப்பார் என்பதுதான் விதி.

ஒருசமயம் விக்கெட்டில் பந்து வந்து மோத, எகிறிமேலே போன இணைப்பான் ஒன்று மீண்டும்வந்து அதே இடத்தில் அமர்ந்துகொள்ள, அந்த ஆட்டக்காரர் ஆட்டம் இழக்கவில்லை என்ற ஓர் நிகழ்ச்சியையும் இங்கே உங்களது நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

24. பெர்னாட்ஷா பேசி விட்டார்!

'பதினொரு முட்டாள்கள் விளையாடுகிறார்கள். அதை பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கின்றார்கள்' என்று கிரிக்கெட் ஆட்டத்தைக் கேலியாக வருணித்தார் என்றுபேரறிஞர் பெர்னாட்ஷாவை குறிப்பிடுவார்கள். அவர் விளையாட்டுக்கு எதிரியோ என்னவோ, ஆனால் அவர் எந்த ஒரு செயல்பற்றியும் அணுகுகின்ற முறை, மற்றவர்களைவிட மாறுபட்டதாகவே இருக்கும்.

ஒருநாள் பெர்னாட்ஷா தனது நண்பருடன் ஒரு ஓட்டல் ஒன்றில் அமர்ந்திருந்தார். அமைதியும் தனிமையுமான சூழ்நிலை அமையவேண்டும் என்பதற்காக அங்கே வந்திருந்தார் போலும். அந்த ஓட்டலின் அடுத்த மண்டபத்தில், ஓர் இசைக்குழு தனது சங்கீதப் பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

சங்கீதம் முன்னுக்குப் பின் முரணான இசையுடன் வந்ததல்லாமல், அதிக சத்தமாகவும் இருந்தது. இதை சகித்துக் கொள்ள முடியாமல் பெர்னாட்ஷா திணறிக் கொண்டிருந்தார். இந்தசமயத்தில், இசைக்குழுவை நடத்தும் இயக்குநர், தான் இருந்த இடத்திலிருந்து பெர்னாட்ஷாவைப் பார்த்து விட்டார்.

அங்கிருந்து அவசரமாக பெர்னாட்ஷாவிடம் வந்தார். பெரிய எழுத்தாளர், புகழ்பெற்ற ஆசிரியருமான பெர்னாட்ஷாவை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர் வந்தார். வந்ததும், அவர் அருகில் அடக்கமாக பவ்யமாகக் குனிந்து, உங்களைப் பெருமைப் படுத்த விரும்புகிறோம். உங்களுக்காக நாங்கள் என்ன Play பண்ணவேண்டும் என்று கேட்டார்.

உடனே பெர்னாட்ஷா, நீங்கள் செஸ் Play பண்ணுங்கள் என்றார். சத்தம் போட்டுக் கழுத்தறுக்க வேண்டாம். சத்தமில்லாமல் சதுரங்கம் ஆடுங்கள் என்ற பொருளில் சொன்னவுடன் இசை நடத்துனர் அங்கே எப்படி நிற்பார்?

நாராசமாக துளைத்த இசையை நிறுத்த புதுமுறையில் பேசினார் பெர்னாட்சா. கிரிக்கெட்டை கேலியாகப் பேசியது போல, சதுரங்கத்தையும் சாடவில்லை அவர். நல்லவேளை! சதுரங்கம் பெர்னாட்ஷாவிடம் தப்பித்துக் கொண்டது.

25. மன்னனும் மனிதன்தான்!

ஒரு கிரிக்கெட் போட்டி ஆட்டம் நடைபெறுகிறது என்றால், குறைந்தது 20,000 பேர்களாவது உட்கார்ந்திருந்து பார்த்து, மகிழ்கின்றார்கள். கிரிக்கெட் ஆடத் தெரியாவிட்டாலும், அதைப்பற்றி என்னவென்று கூட புரிந்துகொள்ள முடியாவிட்டாலும்கூட, கிரிக்கெட் வர்ணனைக் கேட்பது, மற்றவர்களிடம் தனக்குத் தெரிந்தது போல் நடிப்பது எல்லாம் ஒரு 'பேஷன்' ஆக இப்பொழுது நடை பெறுகிறது.

ஆனால், கிரிக்கெட் சரியாக வளர்ச்சியடையாத நாட்களில்கூட, பிரபுக்கள், பெரும் பணக்காரர்கள் இடையே இப்படித்தான் இந்த ஆட்டம் அதிகபிரபலம் அடைந்திருந்தது. பின்னர் அவர்களுக்கிடையே இருந்து கொஞ்சங் கொஞ்சமாக அரச பரம்பரைக்கும் போய் ஆரத் தழுவிக்கொண்டது.

அதன் காரணமாக, அரசர்களின் ஆதரவுமட்டு மில்லாமல், அரசகுடும்பமே ஆடியும் பார்த்தும் மகிழ்கின்ற தன்மையில் கிரிக்கெட் வளர்ந்தது. அதிலும் குறிப்பாக இங்கிலாந்து நாட்டில், மன்னர்கள் இந்த ஆட்டத்தின் மேல் எல்லையில்லா அன்பும் ஈடுபாடும் காட்டி வளர்த்து வந்தார்கள்.

ஆட்டத்தின் முன்னே மன்னனும் மண்ணில் உழைக்கும் விவசாயியும் ஒன்றுதான் என்பார்கள். மன்னன் என்று பார்த்து பயந்து, பந்து ஒதுங்குமா! அல்லது தாக்காது போய்விடுமா!

பண்பாளர்கள் ஆடுகின்ற ஆட்டம் என்று பேர்பெற்ற ஆட்டத்தில் பற்று வைத்திருந்தவர்களைவிட பைத்தியமாயிருந்தவர்கள், இருப்பவர்கள்தான் அதிகம் என்றால், இது மிகையான கூற்றல்ல. உண்மைதான்.

இவ்வாறு கிரிக்கெட் மேல் எல்லையில்லாக் காதல் கொண்டு, எங்கே போட்டி நடந்தாலும் போய் பார்ப்பது, வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் பங்குகொண்டு ஆடிமகிழ்வது என்று இருந்தார் ஒரு மன்னர். அவர் பெயர் பிரடெரிக் லூயுஸ் (**Fredrick Louis**).

இரண்டாம் ஜார்ஜ் எனும் மன்னனின் இதயம் கவர்ந்த மகனாக விளங்கிய பிரடரிக், வேல்ஸ் இளவரசன் என்றும் அழைக்கப்பட்டார். இவர் 1730 - 1740க்கு இடைப்பட்ட காலங்களில், கிரிக்கெட் ஆட்டத்தின் பிரதானக் காப்பாளராகவும் விளங்கியிருக்கிறார் என்று பெருமையுற வரலாறு விரித்துரைக்கின்றது.

ஒருநாள் வேல்ஸ் இளவரசனான பிரடெரிக், பயிற்சிக்காக பந்தை அடித்தாடி விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது. அவர் உடம்பில் பந்து பட்டுவிட்டது. பட்டது என்றால் பட்டு போன்ற மேனியில் தாக்கியது என்றுதானே அர்த்தம்!

இது 1750ம் ஆண்டு நடந்தது. அதன் விளைவாக பெரிதாக ஒன்றும் ஏற்படாது என்று எண்ணிக் கொண்டிருந்தார் போலும். ஆனால், அது உள்காயம் ஆகி, சீழ்பிடித்து விட்டது.

அதே ஆண்டு மார்ச் மாதம், பிரெடரிக் ஒரு விருந்தின் பொழுது, ஆனந்தமாக நடனமாடிக் கொண்டிருக்கும் பொழுது, உள்ளே கட்டியாக பிடித்திருந்த சீழானது (**Abcess**) வெடித்து, அதன் காரணமாக அவர், அகாலமரணம் அடைந்தார்.

ஆதரவளித்தவர் என்றுகூட பார்க்கவில்லை என்று கிரிக்கெட் ஆட்டத்தைத் திட்டி தீர்த்தவர்களே அதிகம். மன்னன் மரணமடைந்தான், இனிமேல் மக்கள் கிரிக்கெட் ஆட்டத்தை ஆடவிடாமல் தடை செய்யப் போகிறார்கள்

அவரது மகன்கள், என்று மக்கள் நினைத்தது போல் நடக்கவில்லை.

பிரெடரிக் லூயியின்மகன் மூன்றாம் ஜார்ஜ், தந்தையின் மரணத்திற்காக வருந்தினானே தவிர, ஆட்டத்தைக் குறைகூற வில்லை, அவனும் ஆதரவு காட்டினான். தானும் விளையாடி மகிழ்ந்தான்.

கிரிக்கெட் வரலாற்றிலே இது ஒரு சோக நிகழ்ச்சிதான் என்றாலும், எதிர்பாராத இழப்பாகப் போய்விட்டதே தவிர, இதனால் எதிர்பார்த்த இன்னல்கள் கிரிக்கெட்டை சாராமல், பிழைக்க வைத்துவிட்டது.

மன்னன் மனிதனாக வந்து விளையாடினான். என்றாலும், ராஜகம்பீரமாக இறப்பினைத் தழுவினான். அவனது புதல்வர்களும் தந்தையைப் போலவே, ராஜகம்பீரமான பாதையில் பெருமிதத்துடன் நடந்து தந்தையின் பெயரையும் புகழையும் காத்தனர்.

உடலால் மறைந்தாலும், புகழால் கிரிக்கெட் உலகில் உலாவரும் மன்னன் பிரெடிரிக் விளையாட்டுப் பற்றை நாமும் வாழ்த்துவோமாக!

26. பார்வையாளர்களுக்குப் பயம்!

கிரிக்கெட் ஆட்டம் ஆடுவதற்கான மைதானத்தின் எல்லை எப்பொழுது வந்தது தெரியவில்லை. என்றாலும், 1884ம் ஆண்டு வெளியான விதிமுறைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற ஒரு குறிப்பு மட்டும் தெளிவாகத் தெரிவிக்கிறது.

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1774ம் ஆண்டு காலத்தில், பந்தாடும் தரையையே (Pitch) எந்த இடத்தில் வைத்துக்கொண்டு ஆடுவது என்பதே தீர்மானிக்கப் படாமல்தான் இருந்து வந்திருக்கிறது.

உள்ளூர் குழுவிற்கும் (Home Team) வெளியூர் குழுவிற்கும் (Visiting Team_) போட்டி நடைபெறுகிறபொழுது, உள்ளூர் குழு எந்த இடத்தில் ஆடலாம் என்று பந்தடித்தாடும் தரையைத் தேர்ந்தெடுக்கும் இடத்திலிருந்து, முப்பது கெஜத்திற்குள்ளாக எங்கேயேனும் ஒரு இடத்தை ஆடுவதற்காகத் தேர்ந்தெடுக்க உரிமையிருந்தது என்ற ஒரு விதியை நாம் காணும் பொழுது ஆச்சரியப் படுகின்றோம்.

அந்த விதியானது 1810ம் ஆண்டு ஒரு புதிய மாற்றம் பெற்றுக் கொண்டது. அதாவது, இரண்டு குழுவினர் சேர்ந்து மனம்ஒத்து, பந்தடித்தாடும் தரையைத் (Pitch) தேர்ந்தெடுத்து விட்டாலும், இரண்டு நடுவர்களும் அதை ஏற்றுக்கொண்டால் பரவாயில்லை. இல்லையென்றால், அவர்கள் தேர்ந்தெடுத்த இடத்திலிருந்து 30 கெஜத்திற்குள்ளாக ஓர் ஆடும் இடத்தைத் தேர்ந்தெடுக்க நடுவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது.

அதே விதிமுறை, மேலும் புதிய அதிகாரத்தை நடுவர்களுக்கு 1824ம் ஆண்டு வழங்கியது. நடுவர்களே பந்தாடும் தரையைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமைதான் அது.

பக்கமாகப் பறந்தோடினர். என்றாலும் இந்த நிலையை எதிர்பார்க்காத ஒரு வயது முதிர்ந்த ரசிகர், ஹான்பி மோதிய வேகத்தில் படுகாயம் அடைந்து போனார்.

இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களை பயத்துக் குள்ளாக்கியது. இதன் காரணமாக 1866ம் ஆண்டு, லார்டு மைதானத்தில் எல்லைக்கோடு ஒன்று இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து முடிவும் எடுக்கப்பட்டது. அதுவும் ஈடனுக்கும் ஹாரோ எனும் குழுவுக்கும் நடந்த போட்டியில் தான் முதன் முதலாக எல்லை குறிக்கப்பட்டது.

1884ம் ஆண்டு எல்லைகள் இருக்க வேண்டும் என்றவிதி கட்டாயமாக்கி உருவாக்கப்பட்டது. என்றாலும், மேலும் 73 ஆண்டுகள் ஆட்டம் அப்படி அப்படியே தொடர்ந்து தான் வந்தது 1957ம் ஆண்டுதான், பந்தாடும் தரையின் மையத்திலிருந்து 75 கெஜதூரம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஒன்று நடந்தால்தான் ஒன்று உருவாகும் எனும் மொழிக்கேற்ப, பார்வையாளர் ஒருவரின் படுகாயத்திற்குப் பிறகுதான் மைதான எல்லை வேண்டும் என்று வந்தது. அதுவே 4 ஓட்டங்கள், என்று உருவாக்கவும் வழியமைத்துத் தந்து ஆட்டத்தில் மறுமலர்ச்சியை ஊட்டி விட்டது.

பக்கமாகப் பறந்தோடினர். என்றாலும் இந்த நிலையை எதிர்பார்க்காத ஒரு வயது முதிர்ந்த ரசிகர், ஹான்பி மோதிய வேகத்தில் படுகாயம் அடைந்து போனார்.

இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களை பயத்துக் குள்ளாக்கியது. இதன் காரணமாக 1866ம் ஆண்டு, லார்டு மைதானத்தில் எல்லைக்கோடு ஒன்று இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து முடிவும் எடுக்கப்பட்டது. அதுவும் ஈடனுக்கும் ஹாரோ எனும் குழுவுக்கும் நடந்த போட்டியில் தான் முதன் முதலாக எல்லை குறிக்கப்பட்டது.

1884ம் ஆண்டு எல்லைகள் இருக்க வேண்டும் என்றவிதி கட்டாயமாக்கி உருவாக்ப்பட்டது. என்றாலும், மேலும் 73 ஆண்டுகள் ஆட்டம் அப்படி அப்படியே தொடர்ந்து தான் வந்தது 1957ம் ஆண்டுதான், பந்தாடும் தரையின் மையத்திலிருந்து 75 கெஜதூரம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்ப்பட்டது.

ஒன்று நடந்தால்தான் ஒன்று உருவாகும் எனும் மொழிக்கேற்ப, பார்வையாளர் ஒருவரின் படுகாயத்திற்குப் பிறகுதான் மைதான எல்லை வேண்டும் என்று வந்தது. அதுவே 4 ஓட்டங்கள், என்று உருவாக்கவும் வழியமைத்துத் தந்து ஆட்டத்தில் மறுமலர்ச்சியை ஊட்டி விட்டது.

27. கேட்டால் கொடுக்கப்படும்!

'மதுரையில் அடிவாங்கியவனுக்கு மானாமதுரையில் மீசை துடித்ததாம் ஆவேசத்தில்' என்று பழமொழி ஒன்று கூறுவார்கள். அடிபட்டவனுக்கு ஆவேசம் அவ்வளவு வேகமாக வந்திருக்கிறது!

எதையும் சுடச் சுட செய்யவேண்டும் என்கிறவர்கள், இந்தப் பழமொழியை அடிக்கடி கூறுவார்கள். ஆமாம்; அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்யத் தவறிவிட்டால், எதுவும் நடக்காமல் போய்விடும். எளிதாகப் பெறக்கூடியதையும் இழக்க நேரிடும்!

'எப்பொழுதோ ஒருமுறை நம்மையறியாமல் நாம் போய்கேட்டால் நடக்காததும் நடந்துவிடும்' என்கிற நிலைமையாலும் வாழ்க்கை மாறி அமைவதுண்டு.

விளையாட்டு மட்டும் விதிவிலக்கா என்ன!

இங்கிலாந்து ஆட்டக்காரர்களில், அதுவும் குறிப்பாக, கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் தலையாய இடத்தைப் பெற்றிருப்பவர் காலம் சென்ற W.G. கிரேஸ் என்பவர். தொழிலில் டாக்டராக இருந்தாலும், கிரிக்கெட் ஆட்டத்தில் புலியாக விளங்கியவர்.

தனது 60ம் வயது வரை முதல்தர கிரிக்கெட் ஆட்டம் ஆடி ஓய்வு பெற்றவர். அவர் கிரிக்கெட் ஆடிய நாட்களில் ஒருநாள் நடுவரிடம் அவர் கேட்டார். அது கிடைத்தது. அதுவே ஆட்டத்தில் விதியாக மாறிவிட்டது. வழியாகவும் அமைந்து விட்டது.

கிரிக்கெட் ஆட்டம் நாள் முழுதும் ஆடப்பெற்று, முடிவு அடையக்கூடிய நேரம். W.G. கிரேஸ் பந்தை தடுத்தாடும் குழுவில் **(Fielding Side)** இருந்து ஆடிக்கொண்டிருக்கிறார். இதுதான் கடைசி பந்தெறி **(Last Ball)** என்ற எறியும் நிலையில், அந்தப் பந்தானது, பந்தாடுபவரின் கால்மெத்தை **(Pads)** மீது பட்டுவிட்டுப் போகிறது, ஆட்டமும் முடிகிறது.

அது விக்கெட்டின் முன்னே கால் இருந்ததாகத் தான் (L.B.W.) அர்த்தம். அதைப்பற்றி நடுவரிடம் யாராவது முறையிட்டுக் கேட்டிருக்கலாம். யாரும் முறையிடவில்லை என்றதால், நடுவரும் முடிவு தரவில்லை. அன்றைய ஆட்டம் அப்படியே முடிந்தது.

அன்றைய மாலைப்பொழுதில், பந்தடித்து ஆடிய ஆட்டக்காரர் கிரேஸிடம் வந்து, 'நல்லவேளை! என்கால் மெத்தையில் பட்ட பந்துபற்றி யாரும் முறையிடவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் நான் ஆட்டம் இழந்து போயிருப்பேன்!' என்று உரைத்துவிட்டு, அல்ல அல்ல, உளறிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் காலையில் ஆட்டம் தொடங்கியது. முதல்பந்து எறிவதற்கு முன்னே, கிரேஸ் ஒரே கத்தாகக் கத்தினார். அது என்ன? **(How is That)** என்றுதான்.

முதல்நாள் மாலையில் கடைசி பந்து எறிந்ததற்கு மறுநாள் காலையில் முறையிடுகின்றார். அது என்ன என்று! நடுவரும் 'ஆமாம்! அது விக்கெட் முன்னே கால்தான்' **(L.B.W.)** என்பதாகக் கூறி, அந்த ஆட்டக்காரரை அவுட்டாகி விடுகின்றார்.

தவளை தன்வாயால் கெடும் என்பார்கள். அந்த ஆட்டக்காரரும் தன்வாயால் கெட்டார். ஆட்டம் இழந்து போனார்.

காலம் கடந்து போனாலும், கிரேஸ் கேட்டார். நல்ல முடிவே கிடைத்தது. ஆனால், அந்த நிகழ்ச்சியும் ஒரே ஒரு முறைதான் நடந்தது. அதற்குப் பிறகு விதி ஒன்று புதிதாகப்புகுத்தப்பட்டது. எதையும் அப்பொழுதே கேட்கவேண்டும் என்பதுதான். அதாவது அடுத்த பந்து எறியப்படுவதற்கு முன்பு.

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா! வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்பார்களே! கிரேஸ் இப்படி கேட்டதால், சரித்திரத்தில் சாகாமல் பிழைத்துக் கொண்டிருக்கிறாரே!

28. செத்தும் ஜெயித்த சீமான்!

ஜெயித்தவன் சாகலாம். அது இயற்கைதான். ஆனால், செத்தவன் ஜெயித்தான் என்றால் அது எப்படி? இயற்கைக்கு மாறாக அல்லவா இது இருக்கிறது! உண்மைக்குப் புறம்பாக அல்லவா நமக்குத் தெரிகிறது!

ஜெயிப்பதற்காகத்தான் போராட்டம் நடக்கிறது. செத்துவிட்டால் எப்படி போராட முடியும்? செத்துக் கொண்டே ஜெயித்தானா? இல்லையென்றால் போனால் போகிறது பாவம் என்று எதிரி தன் தோல்வியை தானாக முன்வந்து ஒத்துக்கொண்டானா!

கேள்விகள் பல கிளைவிட்டுக் கிளம்புவது புரிகிறது. அப்படி நமக்கு ஆர்வம் ஊட்டும் அத்தகைய அதிசயமான சம்பவத்தை என்னவென்று இனி பார்ப்போம். பிறகாவது மனதில் அமைதி காணலாம் அல்லவா!

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே, கீர்த்திமிக்க கிரேக்கர்கள், ஒலிம்பிக் பந்தயங்கள் நடத்தி, தங்களின் ஒப்பற்ற ஆற்றலையும் அறிவாண்மையையும் உலகுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்த காலத்தில்தான், இந்த விநோத நிகழ்ச்சி நடைபெற்றது.

ஓடுவது, தாண்டுவது, வேல் எறிவது, தட்டெறிவது போன்ற நிகழ்ச்சிகளைப் போல, குத்துச்சண்டை மல்யுத்தப் போட்டிகளும் அங்கே நடைபெற்றன. அது மட்டுமன்றி, பயங்கரப் போட்டி ஒன்றையும் நடத்தினார்கள். பங்ராஷியம் என்பது அதன் பெயர்.

இந்தப் போட்டியானது, மல்யுத்தமும் குத்துச்சண்டையும் கலந்து உருவாக்கிய ஒரு கொடுமையான போட்டியாகும். இதற்கென்று வரைமுறையான விதிகள் எதுவும் இல்லை எப்படி வேண்டுமானாலும் பிடிபோடலாம். எதிரியைக்

குத்தலாம், முடிந்தால் கடிக்கலாம், விழுந்து அமுக்கலாம், முறுக்கலாம், எலும்பை முறிக்கலாம். விதிகள் குறுக்கே வராது.

இந்தப் பயங்கரப் போட்டியில்தான் இப்படி ஒரு சுவையான சம்பவம் நடந்தது. இந்த சம்பவத்திற்குக் காரணமாக அமைந்த அந்த வீரனின் பெயர் அரேசியன் **(Arrachian)** ஆகும்.

ஏற்கனவே நடந்திருந்த ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி வீரனாகத் திகழ்ந்திருந்த அரேசியன், இந்த ஒலிம்பிக் போட்டியிலும் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதியுடன் வந்திருந்தான். வெற்றி பெறாமல் செல்வதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டும் இருந்தான்.

விளையாட்டரங்கத்திலே, நடுவர்கள் முன்னிலையில் இந்தப் பயங்கரப் போட்டியான பங்ராசியம் நடக்கத் தொடங்கியது. புகழைப் பெறும் ஆவலில், வெற்றிக்காண, வீரர்கள் இருவரும் சண்டைபோடத் தொடங்கினார்கள்.

சண்டையின் உச்சக்கட்டம். அரேசியனை எதிர்த்த வீரன், அரேசியன் குரல்வளையை தனது கைகளால் அமுத்தி நெறித்துக் கொண்டிருந்தான். விடுபடமுடியாத பிடியின் இறுக்கத்தால் மயக்கம் அடைந்த அரேசியன், தனது கைகளால் எதிரியின் வலதுகாலைப் பிடித்து முறுக்கிக் கொண்டிருந்தான்.

மூச்சுத்திணறி, மரண அவஸ்தையின் வெறியில் அரேசியன் கைகள் எதிரியின் கணுக்கால் மூட்டினை நழுவச் செய்துவிடவே, எதிரி வேதனை தாங்க முடியாமல், தனது இருகைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி விட்டான்.

போரிடும் ஒருவன் தன் இருகைகளையும் உயர்த்தி விட்டால் அவன் தன் தோல்வியை ஒத்துக்கொண்டதாக் அர்த்தம். அப்படித்தான் விதி அமைந்திருந்தது. எதிரி தன்

தோல்வியை, கைகளை உயர்த்திக் காட்டிய நேரத்தில், அரேசியன் மூச்சடங்கிக் கிடந்தான்.

அரேசியன் வெற்றி பெற்றான் என்று அறிவித்த நடுவர்கள், அருகில் வந்து பார்த்தபோது, பிணமாகிக் கிடந்தான். என்றாலும் போட்டி விதியின்படி முடிவு தரப்பட்டது. அரேசியன் தலைவிதி அவனுக்கு அகால மரணத்தை அளித்தது. ஆனால் ஒலிம்பிக் விதியானது அவனுக்கு வெற்றி வீரன் பட்டத்தை அளித்தது.

செத்தவன் ஜெயித்தான் என்ற தீர்ப்புவழங்கி, நடுவர்கள் நியாயம் காத்தார்கள். இந்த சுவையான நிகழ்ச்சி, விளையாட்டு உலகில் அதிசயமான சம்பவமாகவே வரலாற்றாசிரியர்களால் விவரிக்கப் படுகிறது. உண்மையாகவே பங்ராசியம் பயங்கரப் போட்டிதான். முடிவும் பயங்கரமாகவே முடிந்துவிட்டிருக் கிறதல்லவா!

29. வழிவிட்ட வள்ளல்

1932ம் ஆண்டு லாஸ் ஏஞ்செல்ஸ் எனும் இடத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில், 10,000 மீட்டர் ஓட்டப் போட்டி நடைபெற்றது. உலகப் புகழ்பெற்ற வீரர்கள் பலர், இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

வெற்றி பெற்று விடவேண்டும் என்ற வைராக்கிய நெஞ்சுடன், ஜப்பான் தேசத்திலிருந்து ஒரு வீரன் வந்திருந்தான். பார்வைக்கு ஒல்லியாகவும் குள்ளமாக வும் இருந்த அந்தவீரன், ஓட்டம் தொடங்கியவுடனே, தன் நம்பிக்கையை இழக்கத் தொடங்கினான்.

என்னதான் இவன் வேகமாக ஓடினாலும், மற்றவீரர்கள் இவனை பின்னால் தங்கவிட்டு விட்டு வேகமாக ஓடியதுமல்லாமல், ஒரு சுற்றுக்கும் (Round) முன்னால் இருப்பதுபோன்ற வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தனர். ஜப்பானிய வீரனோ தன்னந் தனியனாக ஓடினான். சீக்கிரம் ஓடிச் செல்ல வேண்டும் என்பதற்காக முதல் ஓட்டப் பாதையிலேயே (Lane) ஓடிக்கொண்டிருந்தான்.

அவனது வலதுபுறமாகப் போய்கடந்துதான் மற்றவர்கள் முன்னேறி ஓடவேண்டும். அப்படி மற்றவர்கள் அவனைச் சுற்றி ஓடினால், அவர்கள் அதிக தூரத்தைக் கடக்க வேண்டி நேரிடும். அதனால் அதிக நேரம் ஓடி முடிப்பதாக ஆகிவிடும் என்பதை உணர்ந்த அந்த வீரன், தான் வாழாவிட்டாலும், மற்றவர்களாவது நன்றாக வாழட்டும் என்று முடிவு செய்தான். அதற்காக ஓடும் வழியையும் தாராளமாக விட்டான்.

''முதல் ஓட்டப்பாதையில் ஓடினால்தானே, மற்றவர்கள் தன்னை முந்துவதற்காக, இரண்டாம் ஓட்டப் பாதையில் போய் ஓடிச்செல்ல வேண்டும்! அப்படியில்லாமல், தான் மூன்றாவது பாதையில் ஓடினால் மற்றவர்கள் முதலாவது பாதையில்

தடங்கல் இன்றி ஓடுவார்கள். அதனால் நிச்சயம் நன்மை பயக்கும்'' என்று நினைத்தான். அப்படியே ஓடிக் கொண்டிருந்தான்.

அனுபவப்பட்ட வீரன் அல்லவா அவன்! பண்பட்ட அவன் மனம் எண்ணியது போலவே நடந்தது. உலகப் புகழ்பெற்ற ஓட்டவீரர்களான போலந்து நாட்டின் ஜானஸ் குசோசின்கி, பின்லாந்து நாட்டு வீரர்கள். இசோகலோ, மற்றும் விர்டானென் என்பவர்கள் போட்டி போட்டுக் கொண்டு, முதல் ஓட்டப் பாதையிலேயே ஓடினார்கள்.

அதில் போலந்து நாட்டு வீரர் ஜானஸ் வெற்றி பெற்றார். அதோடுமட்டுமன்றி, 16 ஆண்டுகளாக இருந்த ஒலிம்பிக் சாதனையையும் மாற்றி, புது சாதனையை வரலாற்றில் பொறித்தார்.

எல்லாம் ஓடிமுடிந்த பிறகு, எப்படியும் பத்தாயிரம் மீட்டர் தூரத்தை ஓடிமுடித்துவிட வேண்டும் என்று, கடைசியாக ஓடிவந்த அந்த ஜப்பானிய வீரனை பார்வையாளர்கள் கைதட்டி வரவேற்றனர். பாராட்டினர்.

வழிவிட்ட வள்ளலாக மாறிய, பெயர் தெரியாத அந்த ஜப்பானிய வீரனின் பெருந்தன்மையை இக்கால வீரர்கள் பின்பற்றினால் என்ன? பின்பற்றினால் எத்தனை எத்தனையோ சச்சரவுகளையும் தகராறு களையும் தடுத்து நிறுத்தி, விளையாட்டு உலகத்தை சொர்க்க பூமியாக மாற்றலாம் என்று உங்களுக்கும் இப்படி எண்ணத் தோன்றுகிறது அல்லவா!

30. எதிரியானாலும் மனிதன் தான்!

எதிர்த்துப் போட்டியிடுவதன் காரணமாக மற்றவரை எதிரி என்கிறோம், விளையாட்டுலகின் நோக்கமும் போட்டியிடுவதுதானே! ஆனால், வீரர்கள் பலர் தங்களை எதிர்த்துப் போரிடுபவர்களை கடுமையான பகைவர்களாகவே எண்ணிப் போரிடும் இழிநிலைமைக்கும் இறங்கிப் போய் விடுகின்றனர்.

நேர்வழியில் தங்கள் திறமையை வெளிப்படுத்தவும், வெற்றி பெற்றால் விழுமிய புகழை அடையவும் முயல்வது வீரனுக்குரிய கடமை. அதுதான் ஆற்றல்மிகு மனிதனுக்குரிய பெருமையுமாகும்.

இங்கே ஒரு பண்பாளனை சந்திக்க இருக்கிறோம். தன்னை எதிர்க்க இருந்த ஒருவீரனை, எதிரியாக, பகைவனாக அவன் நினைக்கவில்லை. ஒரு ஆற்றல் உள்ள மனிதனாகவே நினைத்தான். அதனால் வான்புகழ் அடைந்தான். எப்படி! படியுங்கள்!

1932ம் ஆண்டு லாஸ் ஏஞ்செல்ஸ் எனும் இடத்தில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. அதில் 400 மீட்டர் **(Hurdles)** தடைதாண்டும் ஓட்டப்போட்டியில் கலந்து கொள்வதற்காக, உலகப் புகழ்பெற்ற வீரர்கள் இருவர் வந்திருந்தனர். ஒரு வீரன் இங்கிலாந்து நாட்டினன். பெயர் லார்டு டேவிட் பர்கிலி. 1928ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வென்ற வீரன்.

மற்றொரு வீரன் அமெரிக்க நாட்டினன். பெயர் மோர்கன் டெயிலர். இவன் 1924ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற வீரன்.

இரண்டு வீரர்களும் உலக அளவில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு போட்டியிட்டிருக் கின்றனர். என்றாலும் உலகப் புகழ்பெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து, கொண்டு தங்கள் வெற்றியை மீண்டும் நிலைநிறுத்திக் காட்டவேண்டும் என்ற உறுதியுடன் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரத்திற்கு வந்திருந்தனர்.

ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க நாளில் வீரர்கள் அணிவகுப்பு நடைபெறும். அந்தந்த நாட்டு வீரர்கள் தங்கள் நாட்டுக் கொடியுடன், வீரர்களுடன் அணிவகுப்பில் நடந்து சென்று வருவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

மறுநாள் தனது போட்டி நடைபெறவிருந்ததால், அணிவகுப்பில் கலந்து கொள்வதில்லை என்று லார்டு பர்கிலி முடிவு செய்திருந்தான். திட்டப்படி தான் போய்விடக்கூடும் என்பதால்தான் இந்த முடிவு. ஆனால், அமெரிக்க வீரனான மோர்கன் டெயிலர் தனது நாட்டுக் கொடியைப் பிடித்துச் செல்ல வேண்டியிருந்ததால், அணிவகுப்பில் கலந்து கொள்கிறான் என்று சேதியை அறிந்த லார்டு, தன் முடிவை உடனே மாற்றிக் கொண்டான்.

'தனது முதல் எதிரியான மோர்கன், கால் அயர நடந்து களைத்து போகட்டும். நாம் ஓய்வு எடுத்துக் கொண்டு, மறுநாளில் எளிதாக வெற்றிபெற்று விடுவோம்' என்று லார்டின் வீரநெஞ்சம் திட்டம் போடவில்லை.

'அவன் அணிவகுப்பில் கலந்து கொள்கிறான். நானும் கலந்து கொள்வேன்' என்று லார்டு முடிவெடுத்தான். அவ்வாறு தன் முடிவின்படியே நடந்தான். அந்த அணிவகுப்பு நிகழ்ச்சியும் அற்புதமாக நடந்து முடிவு பெற்றது.

மறுநாள் 400 மீட்டர் தடை தாண்டும் போட்டி நடந்தது. அதில் வெற்றி பெற்றது யார் என்றால் இருவருமே இல்லை.

பாப் டிஸ்டால் என்ற அயர்லாந்துவீரன் ஒருவன் வென்றான். அமெரிக்கன் மோர்கன் மூன்றாவது இடத்தையும், இங்கிலாந்து வீரன் லார்டு பர்கிலி நான்காவது இடத்தையும் அடைந்தனர்.

முதலாவது வந்த பாப்டிஸ்டாலும் அணிவகுப்பில் கலந்துகொண்ட வீரன்தான். என்றாலும் ஓய்வு எடுத்திருந்தால் நிச்சயம் லார்டு வென்றிருக்கலாம். ஆனாலும், லார்டு தன் எதிரியை மனிதனாக நினைத்தான். மற்றவன் களைத்திருக்கும் நேரம் பார்த்து வெற்றிபெற்று விடலாம் என்ற குயுக்தியை வெறுத்தான்.

சமவாய்ப்பு இருக்கவேண்டும் என்று ஏற்றுக்கொண்டான். தோற்றாலும் வீரனாகத் தோற்றான். வீர மனிதனாக மாபெரும் புகழுடன், வரலாற்றுலகில் வாழ்ந்து வருகிறான்.

பண்புடையோர் வென்றாலும் தோற்றாலும் புகழப் படுகின்றனர் என்பதற்கு லார்டுவே சாட்சி.

31. விளையாட்டு வழங்கிய வீரம்!

விம்பிள்டன் எனும் இடத்தில் நடைபெறும் டென்னிஸ் போட்டியானது, உலகப்பிரசித்திப் பெற்றதோர் போட்டியாகும். அதிலே வெற்றி பெறுகின்றவர், மாபெரும் பரிசுத் தொகையினை பெறுவதுடன், வரலாற்றிலே உன்னதமான புகழையும் பொறித்துக் கொண்டு விடுவார்கள்.

அந்தப் போட்டியிலே பங்குபெற விரும்பினாள் ஒரு மங்கை, மங்கையல்ல. மணமானவள், ஒரு குழந்தைக்கும் தாயானவள், வயதோ 28. எத்தனை தடை அவளுக்குப் பார்த்தீர்களா!

முடிவெடுத்து விட்டாள் அந்தத் தாய். 1980ம் ஆண்டு நடைபெற இருக்கும் டென்னிஸ் போட்டியில் கலந்துகொண்டே தீரவேண்டும் என்று தீர்மானித்து விட்டாள். ஏற்கனவே ஒருமுறை விம்பிள்டன் போட்டியில் வெற்றி வீராங்கனையாக வந்தவள்தானே!

இன்னும் ஏழு வாரங்கள் இருக்கின்றன. அதற்குள் பயிற்சி செய்து திறமைகளை புதுப்பித்துக் கொள்ளலாம். பலப்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணத் தொடங்கியபொழுது. துக்ககரமான செய்தி ஒன்று வந்து அவளை துளைத்தெடுக்கத் தொடங்கியது.

ஒருமுறை இம்மங்கையின் உடலை பரிசோதனை செய்த டாக்டர்கள். இவள் இரத்தத்தில் புற்றுநோய் இருக்கிறது என்று கூறிவிட்டார்கள். லிக்கேமியா (Leukemia) எனும் 'வியாதியா எனக்கு' என்று அந்த மங்கை அயர்ந்தே போனாள். இரத்தத்தில் புற்றுநோய் வியாதி என்றால், அவள் வாழ்கின்ற வாழ்நாட்கள் எண்ணிக்கையில் தானே அமையும்! சொல்லொணாத் துயரம் அவள்வாழ்க்கையில் புகுந்தாலும், அந்தமங்கை தன்னம்பிக்கையையும் தன் முயற்சியையும் கைவிடவில்லை. தளர்ந்து போய்விடவுமில்லை.

நோயுள்ளவள் விளையாட்டுப் பயிற்சியை எங்கே செய்யமுடியும்? வேண்டாம் என்று தடுத்துவிட்டார்கள். பயம் உள்ளுக்குள் அரித்துக் கொண்டிருந்தாலும் தைரியம் இழக்காத நிலையில், இரவும் பகலும் தன் நினைவுகளிலேயே லயித்துப்போயிருந்தாள் அந்தமங்கை.

இன்னும் இரண்டு வாரங்கள்தான் விம்பிள்டன் போட்டி நடைபெற இருக்கின்றது என்ற நிலையில், மீண்டும் ஓர் அதிர்ச்சியான செய்தி அவளுக்கு வந்தது. ஆமாம்! இரத்த அணுக்களில் லிக்கேமியா நோய் போன்ற அறிகுறிகள் முதலில் தென்பட்டன. ஆனால், அறிகுறிதானே தவிர உண்மையல்ல என்று டாக்டர்கள் தீர்மானமாகத் தெரிவித்து விட்டார்கள்.

நெஞ்சை அரித்துக் கொண்டிருந்த நோய்ப் பயம் தொலைந்துவிட்டது. ஆனால் நேரம் இல்லையே பயிற்சி செய்ய! மரண அவஸ்தை என்பார்களே, அதிலிருந்து விடுபட்டு வந்த வீரமங்கை, மீண்டும் விம்பிள்டன் சென்று போட்டியிட்டாக வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

தன் கணவனுடனும், குழந்தையுடனும் விம்பிள்டன் நோக்கிச் சென்றாள். விம்பிள்டன் போட்டியில் கலந்து கொண்டாள். வென்றாள். டென்னிஸ் ராணி எனும் அற்புதப் பட்டத்தையும் ஆயிரக்கணக்கான ரூபாய்களையும் பரிசாகப் பெற்றாள்.

நோய் என்றதும், நொந்து போய், நைந்து போய், மனநோயினாலேயே மயங்கிக் கலங்கும் மனித குலத்திற்கு இலக்கணமாக இல்லாமல், வீரம் மிகுந்த வீராங்கனையாக, வருவது வரட்டும் என்று எதிர்பார்த்து, எதிர்த்து, மனநிம்மதியுடன் வாழ்ந்து, மாபெரும் சாதனை செய்த வீராங்கனை யார் தெரியுமா? இவான் சுலகாங் கௌலி என்பது தான் அவள் பெயர்.

ஏழு வாரங்கள் அனலில் கிடப்பது போல் வாழ்ந்தாலும், மன அமைதியையும், உடல் ஆற்றலையும், விளையாடும் திறமைகளையும் இழக்காத வீராங்கனை யாக வாழ்ந்திட, இவான் சுலகாங்குக்கு எப்படி அந்த இதயம் வந்தது?

எல்லாம் விளையாட்டு வழங்கிய வீரமும் விவேகமும்தான். எதிர்பாராத சூழ்நிலைகளை, சிக்கல்களை விளைவித்து. விடுவித்துக் கொள்ள வழிகாட்டும் விளையாட்டில் பெற்ற பண்பட்ட மனம்தான், அவளை நிம்மதியாக வாழவைத்தது. வீராங்கனையாகத் திகழவிட்டது.

புற்று நோயின் பயத்தையும் புறம்போக்கிய வீராங்கனை, நமக்கெல்லாம் அற்புதமான கலங்கரை விளக்கமாக அல்லவா நின்று வழிகாட்டுகிறாள்! நாமும் அந்த திடமான இதயத்தைப் பெறுவோம். தேர்ந்த திறமைகளையும் வளர்ப்போம். சிறப்பாக வாழ முயல்வோம். அதுதானே மனிதப்பிறவியின் மகிமை!

32. அதிசயமான ஓட்டப்பந்தயம்

ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெற்றால் புனித ஆலிவ் மலர் வளையத்தை தலையில் கிரீடமாக சூட்டிப் பாராட்டினார்கள் பழங்கால கிரேக்கர்கள். பின்னர், வெற்றி வீரர்களுக்கு வெள்ளித் துண்டுகளைப் பரிசாக அளித்து கௌரவித்தனர் ரோமானியர்கள்.

அதன்பின், தங்கப்பதக்கங்கள் தரும் பழக்கம் ஓட்டப் போட்டியில் நுழைந்துகொண்டது. ஆனால் நாம் இங்கே காணப்படும் போட்டியோ அதிசயமான போட்டியாகும்.

ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டவர் இருவர்தான். அவர்கள் இருவரும் தங்கள் தங்கள் நாடுகளின் ஒரே பிரதிநிதியாகக் கலந்துகொண்டதுதான் இதில் சிறப்பான அம்சம் ஆகும். யார் வெற்றி பெற்றாலும் அது தனிப்பட்ட 'அவருக்கு' வருகின்ற பரிசு அல்ல. அது அவருடைய நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய மாபெரும் பரிசாகும்.

அந்த மாபெரும் பரிசு என்னவாக இருக்கும் என்று கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். இது, உண்மையிலேயே பரம்பரை பரம்பரையாக, வழிவழி வம்சாவளியினர் வாழப்போகின்ற இடங்களை வாங்கித் தருகின்ற அதிசய ஓட்டப் போட்டியாகவும் அற்புதப் பரிசாக வாழும் தீவாகவும்தான் அது அமைந்திருந்தது.

இந்த சுவையான சம்பவம் 1648ம் ஆண்டிலே நடைபெற்றிருக்கிறது.

கரிபியின் கடல் பகுதியில் உள்ள ஒரு தீவு. அதற்கு செயின்ட் மார்ட்டின் என்பது பெயராகும். அங்கேதான் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

இந்தத் தீவினை ஆக்ரமித்துக்கொள்ள இரண்டு நாட்டினர் வந்துவிட்டனர். ஒரு பகுதியினர் பிரெஞ்சு நாட்டினர். மற்ற பகுதியினர் டச்சுக்காரர்கள். அந்த தீவினை

யாருக்கு எவ்வளவு என்று பிரித்துக்கொள்ளும் பொழுதுதான் தகராறு ஏற்பட்டுவிட்டது.

அதனை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முற்பட்ட பொழுதுதான், இவ்வாறு ஓட்டப்பந்தயத்தினைத் தேர்ந்தெடுத்தனர். அந்த முடிவின்படி ஒவ்வொரு பிரிவிலும் இருந்து ஒவ்வொரு ஓட்டக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்கள் அந்த சிறிய தீவின் மேற்குப் புறப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கேதான் ஓட்டப் போட்டியானது தொடங்கி வைக்கப்பட இருந்தது. ஆர்வமுள்ள அனைவரும் அதாவது தங்களுக்கே வெற்றி கிடைக்கப்பெறல் வேண்டும் என்ற ஆசை கொண்ட அனைவரும் அங்கே அலைகடலெனக் கூடியிருந்தனர்.

யார் இந்த ஓட்டப் போட்டியில் வெற்றியடைகின்றாரோ, அவரது நாட்டுக்கு அந்தத் தீவின் வளமான பகுதியாகப் பார்த்து அதிகமான நிலப்பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை உண்டு. தோற்றவருக்கோ அவர் எடுத்துக்கொண்டது போக மீதியுள்ள பகுதிதான் கிடைக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் ஓட்டப் பந்தயம் தொடங்கியது. பதைபதைக்கக் காத்திருந்த கூட்டத்தை நோக்கி வெற்றி வீரராக ஓடிவந்தவர் பிரெஞ்சு நாடு, தீவினில் தங்களுக்குத் தேவையான இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றது. இந்தத் தீர்ப்பை டச்சுக்காரர்களும் மனமார ஏற்றுக்கொண்டனர். முனுமுனுக்கவில்லை.

விளையாட்டுப் போட்டிகள் மனமகிழ்ச்சிக்காக மட்டுமல்ல, வாழ்க்கைப் போராட்டத்திற்கும், வளமான தீர்ப்பினை சுமுகமாக வழங்கவும் உதவியிருக்கிறது பார்த்தீர்களா? வரலாற்றிலேயே இது ஒரு அற்புதமான போட்டிதான். சுவையான சம்பவம்தான்.

33. எப்படித்தான் ஜெயிக்கிறார்களோ!

உலக அரங்கிலும் சரி, ஒலிம்பிக் போட்டிகளிலும் சரி, நீச்சல் போட்டிகள் என்றால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆண் பெண் போட்டியாளர்களே அற்புத சாதனைகளை நிகழ்த்தி, அரிய தங்கப்பதக்கங்களை வென்று தங்கள் தாயகத்திற்குத் திரட்டிக்கொண்டு சென்ற காலம் ஒன்று இருந்தது.

ஆனால், அந்த நிலை இப்பொழுது இல்லை. கிழக்கு ஜெர்மானிய வீரர்களும் வீராங்கனைகளுமே இப்பொழுது சிறந்த சாதனை புரிபவர்களாக விளங்குகிறார்கள்.

பெண்களுக்கான நீச்சல் போட்டிகளில் 13 தங்கப் பதக்கங்கள் தான் ஒலிம்பிக் பந்தயத்தில் உண்டு என்றால், அவற்றில் 11 தங்கப்பதக்கங்களை வென்று விடுகின்ற வீராங்கனைகளாக அவர்கள் விளங்குகிறர்கள். இப்படியாக மொத்தம் 36 பதக்கங்களில் 6 போட்டிகளில் வென்று 26 பதக்கங்களைப் பெற்று பெருமையை சேர்த்துத் தந்திருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவுக்கு நீச்சல் பயிற்சியாளராக இருந்து நிறைய வெற்றிகளை ஈட்டித் தந்த பில்ஸ்வீட்மேன் **(Bill Sweetmen)** என்பவர் வெற்றி பெற்ற வீராங்கனைகளைக் கண்டார். அவர்களின் அளப்பரிய ஆற்றலை நேரில் பார்த்த பிறகு, அவரால் அவரையே நம்ப முடியவில்லை. அவரும் ஒரு பயிற்சியாளர்தானே! அவர்களால் எப்படித்தான் ஜெயிக்க முடிகிறது என்று யோசனை செய்ய ஆரம்பித்தார்.

நம்மவர்கள் என்றால் அவர்களைப் பார்த்து பல சந்தேகங்களைக் கிளப்பி விடுவார்கள். நமக்கு அப்படி பல சந்தர்ப்பங்கள் இல்லை என்பார்கள். வசதிகள் போதாது. வாழ்க்கை அமைப்பே சரி இல்லை என்று சமுதாயத்தின் மீது பழி சுமத்துவர். தங்களை மட்டும் சாமர்த்தியசாலி என்று கதை கட்டிவிட்டு, பெருமை தேடிக்கொள்வார்கள்.

ஆனால், பில்ஸ்வீட்மென் எதுவும் பேசவில்லை. கிழக்கு ஜெர்மானிய வீரர்கள் வீராங்கனைகள் எவ்வாறு இந்தத் திறமைகள் பெறுகின்றார்கள் என்பதை அறியும் ஆவலுடையவரானார். பயிற்சி முறையும், விஞ்ஞான ரீதியில் பழகித் தரும் முறையும் எல்லா நாட்டினருக்கும் ஒன்றுபோல்தான் அமையும் என்றாலும், இவர்கள் பயிற்சி முறை எப்படி அமைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முயற்சி செய்தார்.

அதனால் பில்ஸ்வீட்மென், மாஸ்கோவிலே தான் தங்கியிருந்த நேரங்களில், அதிகநேரத்தை கிழக்குஜெர்மானிய வீராங்கனைகள் பங்குபெறும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும், வீராங்கனைகளுடன் பேசுவதிலுமே நிறைய செலவழித்தார். அவருடைய நோக்கம் எல்லாம் அவர்கள் வெற்றியின் ரகசியம் என்ன என்பதை அறிவதுதான்.

அவரது முயற்சி தோற்கவில்லை, எதை அறிய வேண்டும் என்று விரும்பினாரோ, அதை, மிகவும் நுணுக்கமான ரகசிய பயிற்சிமுறையை, அறிந்து கொண்டார். அவர்களைப் பயிற்றுவிக்கும் அந்நாட்டின ரின் அருந் திறமையையும் பாராட்டி மகிழ்ந்தார்.

அதாவது கிழக்கு ஜெர்மானிய விஞ்ஞானிகள், நீச்சல் போட்டிக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளில்தான், மற்ற நாட்டினரிலிருந்தும், மாறுபடுகின்றனர். சிறுமிகளில், பெண்களுக்குரிய ஹார்மோன் (**Harmone**) சமநிலையை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ச்சி மூலமாகக் கண்டுணர்ந்து, அவர்களில் சிறப்பானவர்களையே தேர்ந்தெடுத்துப் பயிற்சியளிக்கின்றனர்.

அவர்கள்தருகின்ற விஞ்ஞான பூர்வமானசிறப்புப்பயிற்சிக்கு சிறுமிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையில் அவர்கள் திறமை காட்டுவதால்தான். ஒலிம்பிக் பந்தயங்களில் பெரும் வெற்றியடைகின்றனர்என்பதைஸ்வீட்மென்கண்டுகொண்டார்.

வெற்றியின் ரகசியம் புரிந்தது! நடைமுறைப் படுத்தவேண்டுமே!

34. பரிசு படுத்தும் பாடு

1980ம் ஆண்டில் கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரத்தில் முதன் முதலாக புதிய ஒலிம்பிக் பந்தயம் நடைபெற்றது. அதில் கடைசி நிகழ்ச்சியான மாரதான் ஓட்டப் போட்டியில் மட்டுமே கிரேக்க நாடு வெற்றி பெற்றது. கிரேக்க ஓட்டக்காரர் ஸ்பிரிடன் லூயிஸ் வெற்றி பெற்று, தன் தாயகத்தின் மானத்தைக் காத்ததாக ஒரு வரலாறு.

கிரேக்க வீரன் வெற்றி பெற்றதும் அவனது ஆயுள் முழுவதும் இலவசமாக முடி அலங்காரம் செய்து தருவேன், ஆடை தைத்துத் தருவேன், உணவு வழங்குவேன் என்று ஒவ்வொருவராக முன்வந்து பரிசுதர முன்வந்தார்கள். கிரேக்கமே அவ்வீரனுக்கு வாழ்த்தி பரிசுகளை அளித்தது. அவற்றில் பிரச்சினைகள் ஏதுமில்லை.

இந்திய கிரிக்கெட் அணி வெற்றி பெற்று தாயகம் வந்தபோது, அவர்கள் ஆயுள்காலம் வரை குளிர்பானம் வழங்குவோம் என்று வாக்களித்தது ஒரு நிறுவனம். அதில் ஏதும் பிரச்சினை முளைத்தெழவில்லை.

கிரிக்கெட்வீரர் கபில்தேவுக்கு மோட்டார்சைக்கிள் பரிசினை சென்னையில் டெஸ்ட் மேட்ச் நடந்தபோது பரிசளித்தார்கள். அதிலும் பிரச்சினை வரவில்லை.

சண்டிகார் நகரில், சண்டிகார் விளையாட்டுத்துறை எழுத்தாளர்கள் சங்கத்தில், பரிசளிப்பு ஒன்றை நடத்தியபோது, அதன் தொடர்பாக எழுந்த பிரச்சினைதான், பரிசு பெற்றவர்களை பாடாய்படுத்தி விட்டது.

கீதா சட்ஷி (Geeta Zutshi) என்பவர், இந்தியாவில் சிறந்த வீராங்கனை ஆவார். சிறந்த ஓட்டக்காரி என்பதால் அவரை தேர்ந்தெடுத்து, பரிசளிப்பு விழாவும் நடந்தது. சிறந்த

பெண் உடலாளர் (Women Athlete) என்பதாகத் தேர்ந்தெடுத்து அவருக்கு தொலைக்காட்சி (TV set) ஒன்றைப் பரிசளித்தனர்.

தொலைக்காட்சி பெட்டியைத்தான் பரிசளித்தார்களே ஒழிய, அதற்குரிய உரிமத்தை (Licence) கொடுக்க மறந்து விட்டார்கள் விழாக் குழுவினர். தொலைக் காட்சிப் பெட்டியைத் தந்த நிறுவனமும் மறந்து விட்டது போலும்!

தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கின்ற நேரத்தில், மலர்ப்படுக்கையில் முள் இருந்து உறுத்துவதுபோல, வீராங்கனையின் குடும்பத்தார்க்கு மனவேதனையை அளிக்க ஆரம்பித்தது அந்தப் பரிசுப் பொருள்.

உரிய லைசென்ஸ் இல்லாமல் தொலைக்காட்சிப் பெட்டியைப் பயன்படுத்துவது தவறு. தண்டிக்கப்பட வேண்டிய தவறுதான் என்பது எல்லோரும் அறிந்ததே! அதற்கான முயற்சியில் ஈடுபட்டார் அக்குடும்பத்தின் தலைவர் R.N. சட்ஷி. அதாவது விளையாட்டு வீராங்கனையின் தந்தையார்.

தொலைக்காட்சிப் பெட்டி தந்த நிறுவனத்திடம் தொடர்பு கொண்டார். பலமுறை லைசென்ஸ் பெற முயற்சி எடுத்துப் பார்த்தார். மாதங்கள் பனிரெண்டு மறைந்தோடின. ஆனால் அவரது முயற்சியானது ஆரம்ப நிலையிலேயே நின்று போனதே தவிர, ஒரு சிறு பலனைக்கூடத் தரவில்லை.

அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு உரிய லைசென்ஸ் வாங்கலாம் என்றால், அதை வாங்கியதற்குரிய ரசீதும் இல்லை என்பதால், வைத்துக்கொள்ளவும் முடியாமல், வெளியே வீசி எறியவும் முடியாமல் தடுமாறித் தத்தளித்தார் என்பதாக

ஸ்போர்ட்ஸ் உலகம் என்ற ஆங்கில விளையாட்டுத்துறை வார இதழில் படித்தோம்.

பெருமகிழ்ச்சியையும் நிம்மதியையும் தரவேண்டிய பரிசானது, பெரும் சங்கடத்தில், அதுவும் தர்ம சங்கடத்தில் மாட்டிவிட்டிருக்கிறதே! விடவும் முடியாமல் ஏற்கவும் முடியாமல், இருதலைக்கொள்ளி எறும்பாக இருப்பவர்களை ஆட்டி வைக்கின்ற பரிசு படுத்தும் பாடு, கொடுமையான பாடுதான்.

பரிசுபடுத்தும் பாட்டைப் பார்த்தால் பரிசு என்றால் மற்ற வீரர்களும் வீராங்கனைகளும் வெகுவேகமாக ஓடிப்போனாலும் ஆச்சரியமேயில்லை தான்!

35. உயரமாய் வளர்வது குற்றமா!

சோவியத் நாட்டின் பெண்கள் கூடைப் பந்தாட்டக் குழுவில், ஒரு விளையாட்டு வீராங்கனை, பெயர் இலியானா சிமினோவா. ரீகா எனும் பகுதியில் வசிக்கும் விவசாயி ஒருவரின் மகளான இலியானாவின் உயரம் ஏறத்தாழ ஏழடி ஆகும்.

28 வயது ஆன அந்த இளமங்கையின் எடையானது 284 பவுண்டாகும். இன்னும் திருமணமாகவில்லை. என்றாலும், விளையாட்டில் விருப்பமும் விடாத முயற்சியையும் உடைய இலியானாவுக்கு பிரச்சினைகள் அடிக்கடி வரத்தான் செய்கின்றன.

கூடைப் பந்தாட்டத்தில் உலகப் புகழ் பெற்ற ஆட்டக்காரியாக விளங்கும் இலியானா, தனது திறமையை வளர்த்துக்கொள்ள, ஆண்களுடன் தான் விளையாடி பயிற்சி செய்வாள். அதிக உயரமும், தேவையான எடையும் இருந்தாலும், ஆண்களைப்போல வேகமாக ஓட முடியவில்லை, உயரமாகத் தாண்டமுடியவில்லை என்ற குறை இலியானாவுக்கு இருக்கத்தான் இருக்கிறது.

'தானும் ஒரு பெண்தான். ஆணைப்போல ஓடி ஆடிட முடியவில்லை' என்று எண்ணி மயங்கும் நேரத்தில். இன்னொரு பிரச்சினையை கிளப்பி விட்டிருக்கின்றார்கள். அகில உலகக் கூடைப் பந்தாட்டக் கழகத்தினர்.

கூடைப் பந்தாட்டத்தில் பங்குபெற வரும் ஆட்டக்காரிகளின் உயரத்தினை அடிப்படையாக வைத்து, இரண்டு பிரிவாகப் பிரித்து, அந்தந்த பிரிவுக்குத் தனித் தனியாகப் போட்டி நடத்தப் போகிறோம் என்பதுதான் அவர்களின் திட்டம். சாதாரண உயரமுள்ள பெண்களை

ஒன்று சேர்த்து ஒரு பிரிவு. இலியானா உயரத்திற்கு ஒத்தவர்களை வைத்து மற்றொரு பிரிவு.

இதைப்பற்றி இலியானாவிடம் கேட்டபொழுது, 'இது பயன்படாத திட்டம். இது நல்ல திட்டம் அல்ல' என்பதாகப் பதிலளித்தாள். கூடைப் பந்தாட்டத்தில் உள்ள திரில் போய்விடுகிறது. இந்த ஆட்டத்தில் உள்ள வீரமும் போட்டியும் திகில் நிறைந்த சாகசமும் குறைந்து போகின்ற அளவில்தான் இது கொண்டு போகும்.

மற்றவர்கள் அதாவது குள்ளமானவர்கள் கையில் பந்து கிடைத்தால் குனிந்து கைநீட்டித்தானே பந்தெடுக்க முடியும்! அதுவும் கஷ்டம்தானே! அவரவருக்குரிய கஷ்டம் இருக்கத்தானே இருக்கிறது!

நான் உயரமாய் வளர்ந்திருக்கிறேன் என்றால் அது என்னுடைய தவறு அல்லவே! அது என்னுடைய குற்றம் இல்லையே என்று கூறும் இலியானாவின் கூற்று சரிதானே!

திறமையை வைத்து ஆட்டக்காரர்களைப்பிரிக்கின்ற காலம்போய், உயரத்தை வைத்துப் பிரிக்கின்ற காலமும் வந்துவிட்டது பார்த்தீர்களா! கூடைப் பந்தாட்டம் உயரமானவர்களின் ஆட்டம் என்ற கூற்று ஒன்று இருக்கிறது! அது இனி நிலைக்குமோ என்னவோ!

36. ஆர்வத்திற்கும் அளவு உண்டோ!

இளமையின் எழுச்சியும், போராட்ட உணர்ச்சியும் கரைபுரண்டு மோதும் களமாகக் காட்சியளிப்பது விளையாட்டுலகமாகும். விளையாடுகின்றவர்கள் தான் உணர்ச்சி வசப்படுவார்கள், வீறு கொண்டு எழுவார்கள். மாறுபாடுடன் விதிகளை மீறுவார்கள் என்கிற பொதுவான நிலையையும் புறம் தள்ளிவிடுகின்ற பாங்கிலே, பார்வையாளர்களின் எழுச்சியும் உணர்ச்சியும் சில சமயங்களில் எல்லைத் தாண்டிப் போய் விடுவதும் உண்டு.

கிரிக்கெட் ஆட்டத்திலே, இதுபோன்ற கிளர்ச்சி மிகுந்த சூழ்நிலைகள், கேட்டால் நம்ப முடியாத அளவுக்கும் நடந்தேறியிருக்கின்றன. நலம் கெட்டும் போயிருக்கின்றன. நடுவர்களிடம் மோதுவது, விக்கெட்டின் குறிக்கம்புகளை எத்துவது, ஒருவரை ஒருவர் சட்டையைப் பிடித்து இழுப்பது என்பது சர்வ சாதாரணமாக நடக்கக் கூடிய நிகழ்ச்சியாகவும் நிகழ்ந்திருக்கிறது.

ஆனால், சில சமயங்களில் பார்வையாளர்களின் ஆர்வம் காரணமாய் பண்ணுகின்ற அட்டகாசம் அதை அக்கிரமம் என்று கூடக் கூறலாம், எல்லை மீறிப் போய், நடைபெறுகின்ற ஆட்டத்திற்கே தொல்லையாய் முடிவதுண்டு.

1980ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த கிரிக்கெட் நூற்றாண்டு விழாப்போட்டியில், இங்கிலாந்து அணியும் ஆஸ்திரேலிய அணியும் போட்டியிட்டன. போட்டி நடைபெற்று வருகின்ற மூன்றாம் நாள், கடுமையான மழை பெய்ததன் காரணமாக, ஆட்டம் நிறுத்தப் பட்டிருந்தது.

வேடிக்கை பார்க்க வந்த ரசிகர்களுக்கு, விளையாட்டுப் போட்டி இல்லாதது என்னவோ போல் இருந்தது. எதையோ பறிகொடுத்தவர்கள் போல வெறுமனே அமர்ந்திருந்த

நிலையும் எரிச்சல் மூட்டியதோ என்னவோ போட்டியை ஆரம்பியுங்கள் என்று கூச்சல்போடத் தொடங்கினர்.

மழையினால் விளையாடும் பரப்பு பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் காணவும் நிர்ணயிக்கவும், முக்கிய அதிகாரிகள் சிலர் பந்தாடும் பரப்பு (Pitch) நோக்கிப் போய், நிலையினை அறிய நின்று கொண்டிருந்தனர்.

அந்த இடைவெளி நேரத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத பேரார்வம் மிகுந்த பார்வையாளர்களில் சிலர், பாய்ந்து அதிகாரிகளை நோக்கி ஓடினர். அதாவது, அதிகாரிகளைச் சுற்றி முற்றுகையிட்டுக் கொண்டு நின்றனர்.

பந்தடிக்கும் பரப்பில் தண்ணீர் தேங்கியிருப்பதைப் பார்த்தனர். அந்தத் தண்ணீரைப் போக்க வேண்டு மானால், சாக்கு போன்ற துணிகளை நனைத்து நனைத்து வெளியே பிழிந்து விடலாம். அதற்காக அங்கே எந்த விதமான சாதனமும் இல்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

உடனே, அவர்கள் தாங்கள் அணிந்திருந்த கோட், மற்றும் சட்டைகளைக் கழற்றி, இதனை உபயோகித்து, ஆட்டத்தை ஆரம்பியுங்கள் என்று கூறத் தொடங்கினர்.

அவர்களின் ஆர்வத்தையும், ஆட்டத்திற்காகத் தாங்கள் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் மனப்பான்மையும் கண்டு மகிழ்ந்த அதிகாரிகள், அவர்களது கோட்டையும் சட்டைகளையும் வாங்கிக் கொள்ள மறுத்தனர்.

காலை பத்து மணிக்குத் தொடங்க இருந்த ஆட்டத்தை மாலை 3.45க்குத்தான் தொடங்கினர். தாமதமாகத் தொடங்கினாலும், ஆட்டம் தொடங்கியதே என்று ஆர்வமுள்ள ரசிகர்கள் அனைவரும் ஆனந்தமடைந்தனர்.

மேல் சட்டைகளைக் கழற்றித் தந்த மேல்நிலை பார்வையாளர்களைப் பார்த்தோம். இன்னும் சில போட்டி

நேரங்களில் விலங்குகளாய் மாறி வீணாக்கிய வரலாறும் உண்டு.

1907ம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டில் உள்ள லார்டு மைதானத்தில், மிடில் செக்ஸ் குழுவிற்கும், லங்காஷயர் குழுவிற்கும் இடையே கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. முதல்நாள் ஆட்டம் தொடங்கிய சில மணி நேரத்திற்குள்ளாக மழை பெய்யத் தொடங்கியதால், ஆட்டம் நின்றது. மழை நின்ற பிறகு, ஆட்டத்தைத் தொடர முயன்றார்கள். ஆனால், பந்தாடும் பரப்பு நன்றாக இல்லை என்று, லங்காஷயர் குழுவின் தலைவன் ஆட மறுத்து விட்டதன் காரணமாகவே, குழப்பம் ஏற்படத் துவங்கியது.

ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடவேண்டும் என்று ரசிகர்கள் குரல் கொடுத்தனர். கூச்சலிட்டனர். அவர்கள் கோரிக்கை ஏற்கப்படாததால், பந்தயத் திடலுக்குள் பாய்ந்து ஓடினர். பந்தடித்தாடும் தரையைப் பார்க்கப் போனது மட்டுமின்றி, அதில் பலபேர் ஒரே சமயத்தில் வெறியுடன் அலைந்தனர்.

அவர்களை அப்புறப்படுத்துவதே சிரமமான காரியமாக ஆயிற்று. கடைசியில் போலீஸ் வந்துதான் அவர்களைக் கலைத்து விரட்டியது அவர்கள் வெறியால் பந்தடித்தாடும் தரை பாழாய்ப் போயிற்று. பிறகெப்படி ஆட்டம் தொடரும்! குரங்கு கை கிடைத்த பூமாலைபோல, அவர்கள் காலிலே பட்ட பந்தடித்தாடும் தரை வீணாய் போயிற்று.

ஆர்வம் அளவோடு இருந்தால், அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பதாக மாறும். அதுவே மாறி வெறியாகிப் போனால், எப்படி போகும் என்பதற்கு இரண்டாவதாக விளக்கிய நிகழ்ச்சியே சான்றாக அமைந்திருக்கிறது பார்த்தீர்களா!

37. இரும்படிக்கும் இடத்தில்!

இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை என்பது பழமொழி! அப்படிப் போனால் அடிபட்டு சாகும் என்பதுதான் அதன் முடிவாகும் இருக்கும்.

அதுபோலவே, கிரிக்கெட் ஆட்டத்திலே மனிதர்கள்தான் பங்கு பெறுவார்கள். விளையாட்டு வீரர்கள் ஆட, அதிகாரிகள் கண்காணிக்க, நடுவர்கள் முடிவெடுக்க, பார்வையாளர்கள் பார்த்து மகிழ, இப்படித்தான் மைதானம் நிரம்பியிருக்கும். அங்கே நாய்க்கும், குருவிக்கும், சுண்டெலிக்கும் என்ன வேலை?

1963ம் ஆண்டு ஹோவ் என்னுமிடத்தில் மேற்கிந்தியத் தீவின் குழுவிற்கும், சசக்ஸ் குழுவிற்கும் கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. N.I. தாம்சன் என்பவர் பந்தடித்து ஆடுபவராக இருந்து, பந்தை அடித்தபொழுது, அந்தப் பந்து எல்லை ஓரமாகப் போனது.

வெளியே நின்றுகொண்டிருந்த நாய் ஒன்று, உள்ளே வந்து பந்தை கௌவிக் கொண்டு ஓடிவிட்டது. எல்லைக்கு வெளியே பந்துபோய்விட்டது. நாய் தூக்கிக் கொண்டு ஓடியது சரியல்ல. ஆனாலும் அதற்கு 4 ஓட்டங்கள் உண்டு என்பதாக நடுவர் கூறி, தாம்சனுக்கு 4 ஓட்டங்கள் தந்தார். நாய் அவருக்கு உதவியது என்றாலும், அதற்கு அங்கே வேண்டாத வேலைதானே!

இதுபோல இன்னொரு நாய் உள்ளே புகுந்தபொழுது, என்ன ஆயிற்று தெரியுமா? லார்டுமைதானத்தில் பிரௌன் பிரைட்டன் என்பவர், (1783-1857) மிகவும் வேகப் பந்து வீச்சாளர் என்று பெயர் பெற்றவர். அவர் எறிந்தபந்துபட்டு, நாய் அதே இடத்தில் உயிரை விட்டுவிட்டது. விளையாட்டுக் களத்தை போர்க்களம் என்று நினைத்து வந்து வீரமரணம் எய்தி, வரலாற்றிலும் இடம் பிடித்துக் கொண்டது அந்த நாய்.

ஆனால், ஒரு ஊர்க்குருவியும், தூக்கணாங்குருவியும் இப்படித்தான், வராத இடத்திற்கு வந்து, வம்பில் புகழும் மரியாதையும், மற்றொன்றுக்கு கிடைக்கவில்லை, பாவம் தூக்கணாங்குருவி!

1885ம் ஆண்டு ஆகஸ்டு 12ம் தேதி கேம்பிரிட்ஜ் எனும் இடத்தில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் பங்கு கொண்ட குழுக்கள் கெயஸ் மற்றும் டிரினிட்டிஹால் ஆகும். அதில், கார்டியாக்ஸ் என்பவர் எறிந்த பந்து பட்டு, ஒரு தூக்கணாங்குருவி உயிர் துறந்தது. இறந்தது இறந்ததுதான். பரிதாபத்திற் குள்ளாகி வெளியே வீசி எறியப்பட்டது.

ஆனால், ஊர்க்குருவி ஒன்று உயிர் துறந்ததே! அதற்கு வந்த வாழ்வைப் பாருங்களேன்!

1936ம் ஆண்டு லார்டு மைதானத்தில் M.C.C. குழுவிற்கும் கேம்பிரிட்ஜ் கலாசாலைக் குழுவிற்கும் நடைபெற்ற போட்டியில் நுகாங்கீர்கான் எறிந்த பந்து மோதி, அந்த ஊர்க்குருவி உயிரிழந்தது.

ஆனால், மாண்டுபோன குருவியின்மேல் பரிதாபப் பட்டோ என்னவோ, அதனை லார்டு மைதான அரங்கத்தினுள் ஒரு உன்னதமான அறையில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டு, இன்றும் பார்வையாளருக்குப் பரவசமூட்டும் காட்சிப் பொருளாக அமைந்திருக்கிறது.

1967ம் ஆண்டு இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற போட்டியின்போது, தலைகாட்டிய சுண்டெலி ஒன்று அடிபட்டு மாண்டுபோனது.

கிரிக்கெட் மைதானத்திற்குள் வந்து, பந்தால் அடிபட்டுப்போன நாயும், சுண்டெலியும், குருவியும் வரலாற்றிலே இடம் பிடித்துக் கொண்டன. ஆனால் அதிர்ஷ்டம் உள்ள ஊர்க்குருவியோ தன் மரணத்தில் வாழ்வு பெற்றது. இறந்தும் உயிராக இருப்பதுபோல் வந்தவர்க்கு வரலாறு கூறுகிறது. அப்படி ஒரு அதிர்ஷ்டம் அதற்கு!

38. வீரம் இருந்தாலும் விவேகம் வேண்டுமா!

வாழ்க்கையை வளமாக நடத்திச் செல்வதற்கு உதவுவன விளையாட்டில்பெறும் அனுபவங்களே ஆகும். மகிழ்ச்சிக்காக மட்டும் விளையாடுவது அல்ல. மன நிறைவுக்காகவும், உடல் வலிமைக்காகவும்தான் நாம் விளையாடுகிறோம். ஆனந்தமான விளையாட்டு நேரத்தில் ஆபத்தான விளைவுகளும் எப்பொழுதாவது நேர்வதுண்டு.

ஆபத்து நேராமல் விளையாடுவது அறிவுடை யோர்க்கு அழகு. ஆத்திரப்பட்டு விளையாடும் பொழுது அறிவு தடுமாறுகிறது. விதியை மீற நேர்கிறது. வரம்பு மீறும்பொழுது, வருவதெல்லாம் ஆபத்தாகத்தான் முடியும். ஆகவே விழிப்புடனே, நிதானமாகவே விளையாட வேண்டும்.

எதிர்பார்க்காத நேரத்தில் எதுவும் நடப்பதுதான் வாழ்க்கையாகும். சொல்லி எதிர்பார்த்து நடப்பது நிகழ்ச்சி (Incident). சொல்லாமல் எதிர்பாராமல் நடப்பது விபத்து (Accident). எதிர்பாராமல் வருவதை எதிர்பார்த்து எச்சரிக்கையுடன் விளையாடுவதுதான் பண்புள்ளவர். அறிவுள்ளவர் செயலாகும். அப்படி நடந்து கொள்வதுதான் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

சிறந்த வீரர்தான், பிறர் போற்றும் திறமையும் ஆற்றலும் மிக்கவர்தான். இருந்தாலும் இந்த வீரத்திற்கு ஏற்ப, விவேகம் இல்லாததால், எத்தனை கோடி கொடுத்தாலும் கிடைக்காத இன்னுயிரை இழக்க நேர்ந்தது என்ற ஒரு சம்பவம், சரித்திரத்தில் ஒரு சோக சம்பவம்தான்.

G. சம்மர்ஸ் என்றொரு கிரிக்கெட் ஆட்டக்காரர். இங்கிலாந்து நாட்டில் உள்ள நாட்டிங்காம்ஷயர் எனும் பகுதியைச்சேர்ந்தவர். முதல்தர ஆட்டக்காரர். கிரிக்கெட் ஆட்டத்தில் அதிக ஆர்வமும் நீங்கா வேகமும் கொண்டவர்.

1870ம் ஆண்டு, ஜூன் மாதத்தில் ஒருநாள் லார்டு மைதானத்தில் M.C.C. குழுவிற்கு எதிராக இவர் விளையாடியபொழுது, எதிர்பாராமல் ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. அதாவது, ப. பிளேட்ஸ் என்பவர் அடித்த பந்தானது, எகிறி வந்து இவர் தலையைத் தாக்கி விட்டது.

இந்தச் சம்பவம் எதிர்பாராமல் நடந்ததுதான். ஆனால், அந்த விபத்தை மிகவும் எச்சரிக்கையுடன் அணுகி, கவனமாக இருந்திருந்தால் சம்மர்ஸுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது. அவர் செய்த தவறினால், அதாவது அவர் காட்டிய அலட்சியப் போக்கினால், அவரது உயிருக்கே அது ஆபத்தாய் முடிந்துபோனது.

ஆமாம்! தலையில் பந்தடிபட்ட நான்காம் நாள் சம்மர்ஸ் இறந்து போனார். தலையில் பலத்த அடிபட்டு, உயிர் பிழைத்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். இவருக்கு ஏன் இந்த அவல நிலை ஏற்பட்டது? இதன் காரணத்தை அறியும்பொழுது நமக்கு அவர்மேல் இரக்கத்திற்கு பதிலாக எரிச்சல்தான் வருகின்றது.

தலையில் பந்தடி பட்டதும் சம்மர்சுக்கு, தகுந்த மருத்துவங்களை செய்திருக்கின்றனர் உடனிருந்தோர். வைத்தியத்திற்குப் பிறகு அவர் முழு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் முறை. ஆனால், அவர் தன்னை ஒரு இரும்புமனிதர் என்று எண்ணிக் கொண்டார் போலும்! தன் உடம்பு எலும்பாலும் சதையாலும் இரத்தத்தாலும் ஆன ஒரு கலவை என்பதை அறவே மறந்து விட்டார் போலும். தலைக்காயத்தை அவர் மறந்த விட்டார்.

ஓய்வெடுக்காமல் தன் வீட்டுக்குள்ளேயே வேறுவேலை எதையாவது செய்து கொண்டிருந்தாலும் பரவாயில்லை. அவர் மற்றவர்கள் கூறிய அறிவுரையை யும் மிறி, முரட்டுத்தனமாக, பிடிவாதமான, காரியத்தை செய்யத் துணிந்தார்.

மறுநாள் காலையில் கிரிக்கெட் ஆட்டம் மீண்டும் தொடர்ந்தபொழுது, 'நானும் ஆடுவேன்' என்று மைதானத்திற்கு வந்து விட்டார் சம்மர்ஸ். தலைக்காயத்தை மறந்தார். சுட்டெரிக்கும் வெயிலில் நின்று கொண்டு, நாள் முழுதும் பந்தைத் தடுத்தாடும் பணியில் **(Fielding)** இருந்து விளையாடினார்.

அதற்கு மேலும் அவர் ஓய்வெடுத்துக் கொண்டிருக் கலாம். அதுதான் இல்லை, லார்டு மைதானத்திலிருந்து தனது இடமான நாட்டிங்காம்ஷயருக்கு பிரயாணம் செய்தார்.

எல்லா அதிர்வுகளும் இணைந்து கொண்டன. காயத்தின் வேகத்தை அதிகப்படுத்தி விட்டன. முடிவு, அந்த விபத்து அவரை கொள்ளை கொண்டு போய்விட்டது. முதல்தர ஆட்டக்காரர், எல்லா வாழ்க்கை நலன்களையும் அனுபவிக்க இருந்த இளைஞர். அகால மரணத்திற்கு ஆளானார்.

காயம் ஆறும்வரை அவர் காத்திருந்தால், இது போன்ற எத்தனையோ கிரிக்கெட் போட்டிகளில் அவர் கலந்து கொண்டிருக்கலாம். டெஸ்ட் போட்டியில் கூட இடம் பெற்றிருக்கலாம். ஆனால், விளையாட்டை மிகவும் சீரியசாக நினைத்துக் கொண்டார். ஆர்வத்தை அடக்கியாளாமல் விட்டு விட்டார். அறிவுக்கு மதிப்பு தராது, உணர்ச்சிக்கு இடம் கொடுத்தார். அதற்கு ஒரு பெரிய தண்டனையே அவருக்கு கிடைத்து விட்டது.

விபத்து நிகழாமல் விளையாட வேண்டும் என்பதைத்தான் எல்லோருமே எதிர்பார்க்கிறோம். மீறி விபத்து வந்துவிட்டால், அதை சுகப்படுத்தும்வரை, உரிய பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும். அதுதான் உண்மையான விளையாட்டு வீரர்களுக்கு அழகாகும். மீறி நடப்பவர்க்கு சம்மர்ஸ்தான் வந்து புத்திகூற வேண்டும்!

39. பெண்களே போய்விடுங்கள்!

'பெண்களே போய் விடுங்கள்! விளையாட்டுப் பக்கமே வராதீர்கள்! வந்தால் பயங்கர தண்டனைக்கு ஆளாவீர்கள்' என்று விளையாட்டுக்களை ஆரம்பித்த கிரேக்கர்கள் முதல், இன்று விதண்டாவாதம் பேசும் முறைகெட்டவர்கள் வரை விரட்டித்தான் பார்க்கிறார்கள்.

அணைபோடப்போட அடங்காது குதிக்கின்ற வெள்ளம்போல, அவர்களை விரட்ட விரட்ட, அவர்கள் விளையாட்டில் பங்குபெறும் எண்ணிக்கையும், ஆதிக்கமுமே இன்று அதிகரித்துக்கொண்டு வருகிறது.

பழங்கால கிரேக்கத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில், ஆண்கள் மட்டுமே போட்டிகளில் கலந்துகொண்டனர். அவர்கள் பிறந்த மேனியர்களாக போட்டியிட்டதன் காரணமோ அல்லது பெண்களுக்கு விளையாட்டுக்கள் தேவையில்லை என்று எண்ணினார்களோ என்னவோ, பெண்களை ஒலிம்பிக் மைதானம் நடத்தும் பக்கமே தலைகாட்ட விடவில்லை.

விதிகளை மீறி பந்தயம் பார்க்க வந்தவர்களுக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டது. அதையும் அலட்சியம் செய்துவிட்டு, பார்க்க வந்த பிரனிஸ் என்ற தாய் நடத்திய போராட்டத்தால், இந்த விதிமுறை சற்று தளர்ந்தது. அதன் பிறகு, பந்தயங்களில் பெண்களும் கலந்து கொள்கின்ற வாய்ப்பும் உரிமையும் கிடைத்தது.

புதிதாக ஒலிம்பிக் பந்தயங்களை அரம்பித்த பொழுது, அதன் பிறகு, பந்தயங்களில் பெண்களும் கலந்து கொள்கின்ற வாய்ப்பும் உரிமையும் கிடைத்தது. புதிதாக ஒலிம்பிக் பந்தயங்களை ஆரம்பித்த பொழுது, பெண்களுக்கும் அதே கதிதான் நேர்ந்தது. பெண்களுக்கென்று போட்டிகள்

நடத்தப்படவில்லை. ஆனால் வேடிக்கை பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள். பெண்களே போய்விடுங்கள் என்று மரண தண்டனையைக் காட்டி பயமுறுத்தும் காலம் மலையேறிப் போய், வேடிக்கை பார்க்க வாருங்கள் என்று விரும்பி அழைக்கின்ற காலமும் வேகமாக வந்து சேர்ந்தது.

பெண்கள் விடுவார்களா என்ன? ஏன் எங்களுக்கும் ஒலிம்பிக் பந்தயங்களில் இடம் இல்லை? வாய்ப்பு மறுக்கப்படுகிறது? நாங்கள் எதற்கும் சளைத்தவர்கள் இல்லை, என்று பேசிப் பேசி, பின்னர் போராட்டம் நடத்தத் தொடங்கி விட்டார்கள். பணிந்து விட்டது ஆண்கள் இனம். அதிகாரிகள் குழாம்.

1896ல் தான் முதல் பந்தயங்கள் நடத்தப்பட்டன. 1900ம் ஆண்டு நடந்த இரண்டாவது ஒலிம்பிக் பந்தயங்கள் பாரிசில் நடத்தபட்டபொழுது, டென்னிஸ், கோல்ஃப் போன்ற ஆட்டங்களில் மட்டுமே பெண்கள் போட்டியிட அனுமதிக்கபட்டனர். அதில் 11 பெண்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

முதன் முதல் ஒலிம்பிக் பந்தயங்களில், தங்கப் பதக்கம் பெற்ற பெருமையை உடையவள், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை ஷிர்லே கூப்பர் **(Shirley Cooper).**

ஏனோ தெரியவில்லை மற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் இது தொடரவில்லை. 1928ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்களுக்கான போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்களுக்கு என்று 5 ஓட்டப் பந்தய நிகழ்ச்சிகளே புகுத்தப்பட்டன.

100 மீட்டர் ஓட்டம், 800 மீ. ஓட்டம், 4x100 மீட்டர் தொடரோட்டம், உயரத் தாண்டுதல், தட்டெறிதல் ஆகிய

நிகழ்ச்சிகளில் தொடங்கிய பெண்களுக்கான போட்டிகள், இன்று பல்வேறு நிகழ்ச்சிகளாக ஆக்ரமித்துக் கொண்டே வருகின்றன.

1976ம் ஆண்டு மான்ட்ரியலில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 13 விதமான போட்டிகள் பெண்களுக்காக நடத்தப்பட்டன. 1980ம் ஆண்டு நடைபெற்ற மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயத்தில் பெண்களுக்கான வளைகோல் பந்தாட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அகில உலக ஒலிம்பிக் கமிட்டி ஒரு கணக்கெடுப்பில் ஈடுபட்டு, இதுவரை எத்தனை விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பந்தயங்களில் கலந்துகொண்டிருக்கின்றனர் என்பதைக் குறித்துக் காட்டியிருக்கிறது. அதன் விவரத்தைக் கீழே தருகிறோம்.

இதுவரை 18 முறை ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்று இருக்கின்றன. அவற்றில் 62,237 வீரர்களும் வீராங்கனைகளும் உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் வந்து பங்கேற்றிருக்கின்றனர்.

அதாவது பந்தயங்கள் 1972ம் ஆண்டு மியூனிக்கில் நடைபெற்றபொழுது, 121 நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 7147.

21வது பந்தயமாக 1976ம் ஆண்டு மான்ட்ரியலில் நடைபெற்றபொழுது 6189 வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் சுவையான அம்சம் என்னவென்றால், இந்த ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை 1274 ஆகும்.

மியூனிக் ஒலிம்பிக்கில் 1070 பெண்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம்,

பெண்கள் பந்தயங்களில் கலந்து கொள்ளும் வேகமும் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

பெண்கள் பங்கு பெறுகின்ற போட்டிகளை ஆண்கள் பார்க்கக் கூடாது என்று சென்ற ஆண்டு பாகிஸ்தான் அரசாங்கம் கடுமையான எச்சரிக்கையே விடுத்தது. 'பெண்களே போய்விடுங்கள்' என்ற காலம்போய் 'ஆண்களே வராதீர்க்ள, போய்விடுங்கள்' என்ற காலம் வந்துவிட்டது பார்த்தீர்களா!

பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்!

40. இடம் பிடிப்பது சுலபமா என்ன?

1922ம் ஆண்டில் ஒருநாள் மாலைநேரம். வளைகோல் பந்தாட்ட ஆடுகளத்திற்குள் இரண்டு குழுக்கள் விளையாடத் தயாராக இருக்கின்றன. ஏனோ தெரியவில்லை. ஆட்டம் தொடங்கிடவில்லை.

சிறிதுநேரம் கழித்துத்தான் சேதி தெரிகிறது. ஒரு குழுவில் 10 ஆட்டக்காரர்கள்தான் இருக்கிறார்கள். இன்னும் ஒருவர் இருந்தால் ஆட்டத்தைத் தொடங்கிவிடலாம். ஆனால் ஆள் யாரும் கிடைக்க வில்லையே!

ஏக்கத்துடன் சுற்றும் முற்றும் பார்த்து மற்றவர்கள் நிற்கும்பொழுது, ஒருவனைப் பார்க்கிறார்கள். பள்ளிக்கூடம் விட்டு அந்தப் பையன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான். அவனை வந்து விளையாடு என்று ஆள் தேடும் குழுவினர் அழைக்கின்றார்கள். அவனும் சரி என்று, புத்தகப் பையை கீழே போட்டுவிட்டு வந்து சேர்ந்து கொள்கிறான்.

பதினோராவது ஆட்டக்காரர் இல்லை என்பதற்காக, ஆள் இல்லாததால், 'ஒப்புக்குச் சாப்பாணி' என்பார்களே, அப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டான் அந்த சிறுவன்.

ஆட்டம் தொடங்கி விட்டது. அவன் மைய முன்னாட்டக்காரர் **(Centre Forward)** என்ற இடத்தில் நின்று ஆடத்தொடங்கினான். புதிதாக வந்து சேர்ந்த பயமோ அல்லது மற்றவர்களைப் புரிந்துகொள்ள முடியாத தன்மையோ என்னவோ, அந்தச் சிறுவன் பயந்து பயந்து ஆடினான். அதாவது தன்னம்பிக்கை யில்லாதவனாகவே ஆடிக்கொண்டிருந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வயது முதிர்ந்த ஒருவர் சிறுவன் அருகில் வந்து, தம்பி! நீ விளையாடுகின்ற இடம்

முக்கியமான இடம் என்பதை மறந்துவிட்டாயே! என்று நினைவுபடுத்திவிட்டு, தைரியம் ஊட்டிச் சென்றுவிட்டார்.

பிறகென்ன! சிறுவனின் ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்துவிட்டது. அன்று அந்த சிறுவன் எதிராளிகளின் இலக்கிற்குள் 10 முறை பந்தடித்து, தன் குழுவிற்கு வெற்றி தேடித் தந்துவிட்டான்.

இடம் பிடித்துக் கொண்ட அந்த சிறுவன், எல்லோருடைய இதயத்திலும் இடம்பிடித்துக் கொண்டான். அன்றிலிருந்து அந்த சிறுவனின் ஆட்டத்தில் மறுமலர்ச்சி புகுந்து கொண்டது. அந்த சிறுவன்தான் தயான் சந்த் என்று அழைக்கப்படும் உலக மகாவீரன்.

வளைகோல் பந்தாட்டப் புலி **(Hockey wizard)** என்று உலகத்தாரால் செல்லமாக அழைத்துப் பாராட்டப் பெற்ற வீரன். சிப்பாயாக இராணுவத்தில் சேர்ந்த தயான் சந்த், விளையாட்டில் வளர்த்துக் கொண்ட திறமையால் மேஜராகப் பதவி உயர்த்தப் பெற்று கௌரவிக்கப்பட்ட மகாவீரன்.

தனக்குரிய இடம் எது என்று உணர்ந்து கொண்ட அந்த வீரன், கடைசி வரையிலும் கொண்டது விடாமல் கண்டதை விடாமல் கட்டிக் காப்பாற்றி, வளைகோல் பந்தாட்டத்தில் பெரும்சரித்திரம் படைத்த மகாவீரன் ஆவான்.

இடம் பிடிப்பது என்பது சுலபம்தான். ஆனால், இடத்தை விடாமல் அங்கேயே இருப்பது என்பது எல்லோராலும் முடியுமா! முடியாது. அதற்கு உள்ளத்தில் உறுதியும், உழைப்பில் திண்மையும், கண்ணும் கருத்தும் நிறைந்த கடமை உணர்வும், தெய்வமாகப் போற்றும் செயலாண்மையும் நிறையவே வேண்டும். அத்தனையும் நித்தமும் கொண்டிருந்ததால்தான், தயான் சந்த் இன்று புகழின் சிகரத்தில் வீற்றிருக்கின்றார்.

அன்புள்ள வாசகர்களுக்கு

விளையாட்டுக்களில் சுவையான சம்பவங்கள் பற்றி நீங்கள் படித்து முடித்த பிறகு, இந்நூல் உங்களுக்கு சுவையாகவும், மகிழ்ச்சிகரமாகவும் அமைந்திருந்தது என்று நீங்கள் கருதினால், இது போலவே மேலும் பல புத்தகங்கள் நான் எழுதியவை இருக்கின்றன என்பதை உங்களுக்கு நினைவு படுத்துவது என் கடமை என்று எண்ணுகிறேன்.

என் நூல்களைத் தொடர்ந்து வெளியிடும் ராஜ்மோகன் பதிப்பகத்தாரிடம் எழுதிக் கேட்டு, வாங்கிப் படித்து மகிழுமாறும் பயன் பெறுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்

டாக்டர் எ . நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI